தினமலர்

கம்ப்யூட்டர் மலர்

ஜனவரி 26, 2009 இதழுடன் இணைப்பு

ஆன்லைன்
பேக்அப்

மேக் டிப்ஸ்

ஒரு சின்ன பெர்சனல் பிரேக்

மேக் கம்ப்யூட்டர் பயன்படுத்துபவர்களுக்கும் டிப்ஸ் வழங்குவது குறித்து மகிழ்ச்சி. டிடிபி துறையில் நிறைய பேர் இதனைப் பயன்படுத்துகின்றனர். தயவு செய்து டிப்ஸ் வெளியிடுவதை நிறுத்தாமல் வாரா வாரம் போடவும்.

– ஜெரால்ட், புதுச்சேரி.

வயர்லெஸ் கீ போர்டு உள்ளது என்று தெரியாமல் இருந்த எங்களுக்கு அவை குறித்த தகவல்களையும் அவற்றின் விலை குறித்தும் தெரிவித்ததற்கு நன்றி.

–சீ. ஜெயலஷ்மி, மேட்டுப்பாளையம்.

தொழில் நுட்பச் சொற்கள் குறித்து விளக்கங்களை ஒவ்வொரு வாரமும் வெளியிடவும். ஏதேனும் ஒன்று தான் நாங்கள் அறிந்ததாக உள்ளது. மற்றவை குறித்த தகவல்கள் எங்களுக்குப் புதிய செய்திகளைத் தருவதாக உள்ளன.

–எம். கணேஷ், விழுப்புரம்.

இமெயில் குறித்த விரிவான கட்டுரை நாம் எப்படிப்பட்ட வலை வழியாக இதனைப் பயன்படுத்திக் கொண்டிருக்கிறோம் என்பதனையும் அதில் எவ்வளவு ரிஸ்க் உள்ளது என்பதனையும் தெளிவாகக் காட்டியது.

–இரா. தமிழ்ச் செல்வி, மேலூர்.

இன்டர்நெட் எப்படியெல்லாம் பயன் தருகிறது; மக்கள் எவற்றை எல்லாம் நாடு

கிறார்கள் என்று அறிய வேடிக்கையாக இருந்தது. இருப்பினும் ஆர்குட் போன்ற சமுதாய தளங்கள் ஆரம்பித்ததின் நோக்கம் நிறைவேறும் வகையில் மக்கள் பயன்படுத்துகிறார்கள் என்பதை அறிய மகிழ்ச்சி.

– கா. பூபதி ராஜன், தேனி.

ஆக அட்மினிஸ்ட்ரேட்டர் என்பது இதுதான்! என்று வியக்க வைக்கும் அளவிற்குத் தெளிவாக அது பற்றி விவரித்திருக்கிறீர்கள். ஒவ்வொரு முறையும் இது சிக்கலான சமாச்சாரம் என்று ஒதுங்கி இருந்தேன். சொந்தக் கம்ப்யூட்டர் இருந்தும் அந்நியனைப் போல இந்த சொல் என்னைத் துரத்திக் கொண்டு இருந்தது.

–கா. விக்னேஷ், சென்னை

சாமானிய மக்கள் கூட இப்போது கேம் கார்டர் வாங்கலாம் என்கிறார்கள். எனவே அது குறித்தும் விலை குறைந்த கேம்கார்டர் குறித்தும் தகவல் தரவும்.

–எஸ். மாணிக்க ராஜன், செங்கல்பட்டு

ரூ.13,500 குறைந்த விலையா? என்ன கதை விடுகிறீர்களா? சந்தையில் இருக்கும் சாதாரண போன்களில் கிடைக்கும் அதிக வசதிகள் குறித்து எழுதவும்.

–என். கே. சுந்தர ராஜன், பொள்ளாச்சி

உள்ளே

எக்ஸ்பியைக் காப்பாற்றுவோம் — 07
உரசிப் பார்த்த ஆட் ஆன் தொகுப்புகள் — 13
மொபைல் போனில் வைரஸா! — 29

வாசகர்களே...

கம்ப்யூட்டர் பயன்பாடு குறித்த தங்களின் சந்தேகங்களையும் கேள்விகளையும் எழுதுகையில் சுருக்கமாக எழுதுமாறு வேண்டுகிறோம். கம்ப்யூட்டர் மலரில் இன்னும் எந்த தலைப்பில் எழுத வேண்டும் என்பது குறித்த தங்கள் தேவைகளையும் எழுதப்படும் கட்டுரைகள் மற்றும் குறிப்புகள் குறித்த தங்கள் கருத்துக்களையும் எங்களுக்குத் தெரியப்படுத்தலாம்.

எழுதி அனுப்ப வேண்டிய முகவரி

கம்ப்யூட்டர் நூல்கள்

கம்ப்யூட்டர் பயன்பாட்டினைக் கற்றுக் கொடுக்கும் வகையில் வெளியிடப்படும் நூல்கள் மற்றும் சிடிக்கள் குறித்த குறிப்புகள் கம்ப்யூட்டர் மலரில் இடம் பெற அவற்றின் இரு பிரதிகளைக் கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்புமாறு அன்புடன் வேண்டப்படுகிறது. சிடியை அனுப்புகையில் அதனை உருவாக்கியவர், தயாரித்த நிறுவனம், கிடைக்கும் இடங்கள், விலை, வெளியிட்ட நாள் ஆகியவை குறித்த கடிதம் உடன் அனுப்பப்பட வேண்டும். 2008ம் ஆண்டில் முதன் முறையாக வெளிவந்தவற்றை மட்டும் அனுப்பவும்.

பொறுப்பாசிரியர், தினமலர்– கம்ப்யூட்டட் மலர், 8, காசாமேஜர் ரோடு, எக்மோர், சென்னை 600 008

பேக் அப் பேக் அப்

ஆன் லைன் பேக் அப்

பேக் அப்: கம்ப்யூட்டர் பயன்பாட்டில் ட்ரெயின் போன பிறகு ஸ்டேஷனுக்கு வரும் பயணியாய் நம் மனதில் தோன்றும் ஒரு செயலைத்தான் இது குறிக்கிறது.ஆம், பல முறை நாம் இதனைப் பற்றி பேசினாலும் படித்தாலும் அதன் பயன்பாட்டினை மிக வும் சாதாரணமாகவே எடுத்துக் கொள்வோம்.

பெரும்பாலானோர் பேக் அப் எடுக்காததன் நஷ்டத்தை சிஸ்டம் கிராஷ் ஆன பின்தான் உணர்வார்கள். ஏன்? இதில் என்ன சிரமம்? ஒவ்வொரு நாளும் இதற்கென எடுத்து வைக்க வேண்டுமே என்ற ஒரு சோம்பேறித்தனம்தான். ஆனால் நாம் அரும்பாடு பட்டு உருவாக்கிய பைல்களை சிஸ்டம் கிராஷ் அல்லது வைரஸ் அட்டாக் மூலம் இழக்கும்போதுதான் அடடா! பேக் அப் எடுத்திருந்தால் நன்றாக இருக்குமே என்று எண்ணுகிறோம்.

அதுவும் டேட்டா ரெகவரி நிபுணர்களை அழைத்து என் கம்ப்யூட்டர் என் காலை வாரி விட்டது. என் பைல்களை எடுத்துத் தர முடியுமா? என்று கேட்டு அவரும் அது இது என்று பில் போட்டு ரூ.10 ஆயிரம் ஆகும் என்று சொல்லும் போதுதான் அடடா பேக் அப் எடுத்திருக்கலாமே என்று எண்ணுகிறோம்.

பெரிய நிறுவனங்கள் தங்கள் செயல்பாட்டிற்கு நிறுவனத்தில் இயங்கும் கம்ப்யூட்டர் நெட்வொர்க்கினையே நம்பி இருப்பதால் நிறைய செலவழித்து முறையான ரெகுலர் பேக் அப்பினை மேற்கொள்கிறார்கள். இதில் முதலீடு செய்வதில் தயக்கம் காட்டுவதில்லை.

ஏனென்றால் இதன் மூலம் பாதுகாக்கப்படும் டேட்டாவின் மதிப்பு உயர்ந்ததாயிற்றே. ஏன் நாம் நம் பெர்சனல் கம்ப்யூட்டரில் பாது காக்கும் பைல்களும் விலை உயர்ந்தவை தானே. குழந்தைகளின் போட்டோக்கள், இளவயதில் எழுதிய கவிதைகள், சி மொழி கற்ற பின்னர் முதன் முதலில் எழுதிய புரோகிராம்கள், வீடியோ காட்சிகள் என ஒவ்வொருவருக்கும் விலை மதிக்க முடியாத பைல்கள் இருக்கத் தான் செய்யும்.

அப்படியானால் ஒவ்வொரு நாளும் நேரம் ஒதுக்கி அனைத்தையும் பேக் அப் செய்திட வேண்டுமா? அந்த கஷ்டத்தை அனுபவிக்க வேண்டுமா? அல்லது இதற்காக அதிக கட்டணம் செலுத்தி தனி ஹார்ட் டிஸ்க் மற்றும் பேக் அப் புரோகிராம் வாங்க வேண்டுமா? என்று நீங்கள் கேட்கலாம். தேவையில்லை.

கஷ்டத்துடனும் பணம் செலவழித்தும் உங்கள் பைல்களுக்கு நீங்கள் பேக் அப் எடுக்க வேண்டியதில்லை. இதற்கான செலவெல்லாம் உங்கள் பிராட் பேண்ட் கனெக்ஷனுடன் நீங்கள் இன்டர்நெட் இணைப்பிற்கு செலுத்தும் பணம் மட்டுமே. இது எப்படி சாத்தியம் என்பதனை இங்கு காணலாம்.

ஆன்லைன் பேக் அப் சர்வீஸ்: அனைத்து வழிகளிலும் நமக்கு ஆபத்பாந்தவனாய் இயங்கும் இணையம் இதற்கும் நமக்கு உதவுகிறது.

இணையத்தில் பல இடங்களில் நமக்கு ஆன்லைன் பேக் அப் சர்வீஸ் கிடைக்கிறது. சில தளங்கள் இணையத்தில் உள்ள சர்வர்களில் இலவசமாக இடம் தருகின்றனர்.

இதில் நாமாக பைல்களை சேவ் செய்திடலாம். வேறு சில அமைப்புகள் தானாக இயங்கும் சாப்ட்வேர் புரோகிராம்களைத் தருகின்றன. இந்த புரோகிராம்கள் நம் ஹார்ட் டிஸ்க் செயல்பாட்டை நாம் கம்ப்யூட்டர் இயக்குகையில் பின்னணியில் இருந்து கண்காணித்து வரும்.

நாம் பேக் அப் எடுப்பதற்காக மார்க் செய்திடும் போல்டர்களைக் கண்காணித்து அவற்றை பேக் அப் செய்து வைக்கும். எந்த ஒரு பைலில்

நாம் ஒரு மாற்றத்தை மேற் கொண்டாலும் உடனே அதனை உணர்ந்து பேக் அப் பிற்காக எடுத்துக் கொள்கிறது.

ஏற்கனவே அந்த பைல் சேவ் செய்யப்பட்டிருந்தால் அதனை அப்டேட் செய்து கொள்கிறது. இந்த சர்வீஸ் வழங்கும் பெரும் பாலான அமைப்புகள் இலவச ஸ்டோரேஜ் ஹார்ட் டிஸ்க் இடத்தையும் வழங்குகின்றன. இது அதிகமாக வேண்டும் என் றால் சிறிது கட்டணம் செலுத் தியே பெற முடியும்.

இவ்வாறு இணையத்தில் நமக்குத் தரப்படும் விர்ச்சுவல் ஹார்ட் டிஸ்க்கினை இன்டர் நெட் வழியாக எங்கிருந்தும் அணுக முடியும். நம் கம்ப் யூட்டரின் ஒரு கூடுதல் டிஸ்க் காக இவற்றை நாம் கருத முடி யும். பைல்கள் தொலைந்து போனாலோ அல்லது சிஸ்டம் கிராஷ் ஆனாலோ இணையம் மூலமாக நாம் இந்த டிஸ்க்கை அடைய முடியும். இவை நாம் பயன்படுத்தும் கம்ப்யூட்ட ரில் இன்னொரு டிஸ்க்காக செயல் பட்டு பைல்களை நமக்குத் தரும். பைல் தொலையும் பட்சத்தில் இல்லாமல் அடிக்கடி வெளியூர் செல்கிறீர்களா? அப்போது கூட இந்த சேவையினை நீங்கள் பயன்படுத்தலாம்.

ஏன் நாம் டிவிடி அல்லது பென் டிரை வில் காப்பிஎடுத்து வைக்கலாமே என்று ஒரு சிலர் எண்ணலாம். யார் சரியாகத் தினந்தோறும் இந்த வேலையைப் பார்ப்பார்கள். மேலும் ஆன்லைன் ஸ்டோரேஜ் கிடைக்கும்போது அது தொலை யாது. கீழே விழாது; கெட்டுப் போகாது.

இன்னொரு சந்தேகம் நமக்கு எழலாம். இந்த பைல்கள் மற்ற வர்களின் கண்ணில் படாமல் இருக்குமா என்பதுதான். நிச்சய மாய் இருக்கும்.

ஏனென்றால் நாம் இந்த விர்ச்சுவல் ஹார்ட் டிஸ்க்கு களுக்கு பைல்களை அப்லோட் செய்கையில் அவை என்கிரிப்ட் செய்யப் பட்டே அனுப்பப்படு கின்றன.

இங்கே கிரெடிட் கார்ட் பயன் படுத்துகையில் நம் பாஸ்வேர்ட் மற்றும் எண்கள் எப்படி பாது காக்கப்படுகின்றனவோ அது போலவேதான் இங்கும் பாது காக்கப்படுகின்றன. இனி இந்த சேவை வழங்கும் சில தளங்க ளையும் அவை என்ன அடிப்ப டையில் வழங்குகின்றன என்ப தனையும் பார்ப்போம்.

1. நீங்கள் இதுவரை ஆன் லைன் ஸ்டோரேஜ் வசதியி னைப் பயன்படுத்தவில்லை என் றால் உங்களுக்கு உகந்தது டிராப் பாக்ஸ் என்னும் தளம் தான். (Dropboks www.dropboks.com) இந்த சர்வீஸ் 1 ஜிபி இலவச ஸ்டோரேஜ் தருகிறது. மிக எளி மையானது. இந்த தளத்திற்கு சென்று Sign up என்ற இடத்தில் கிளிக் செய்வதன் மூலம் உங்க ளைப் பதிந்து கொள்ள வேண் டும்.

நீங்கள் மட்டுமே பயன் படுத்தும் வகையில் பாஸ்வேர்ட்



ஒன்றினை அமைத்துக் கொள் ளுங்கள். பின்னர் இந்த இணைய தளத்தின் மெயின் பக்கத்திற்குச் செல்லுங்கள். அங்குள்ள பிர வுஸ் பட்டனில் கிளிக் செய்தால் உங்கள் கம்ப்யூட்டரின் ஹார்ட் டிஸ்க்கிலிருந்து பைல்களைத் தேர்ந்தெடுக்கலாம்.

ஒரு தனிப்பட்ட பைல் 50 எம்பி அளவிற்குள்ளாக இருக்க வேண்டும். ஒன்றுக்கு மேற் பட்ட பைல்களை அப்லோட் செய்திட அங்குள்ள சிறிய + அடையாளத்தின் மீது கிளிக் செய்து பைல்களை தேர்ந்தெ டுக்கவும். பாதுகாப்பாக பேக் அப் செய்ய வேண்டிய பைல்கள் அனைத்தையும் தேர்ந்தெடுத்த பின்னர் Upload Files என்ற பட் டனை அழுத்துங்கள். பைல்கள் அனைத்தும் அது எந்த வகை யாய் இருந்தாலும் (டாகு மென்ட், ஜேபெக், வீடியோ போன்ற) அகர வரிசைப்படி அடுக்கப்படும். இவற்றை ஏதே னும் ஒரு போல்டரில் அமைக்க வேண்டும் என்றால் பைல் லிஸ்ட் கீழாக ரைட் கிளிக் செய்து போல்டரை உருவாக்க லாம். போல்டருக்குப் பெயர் கொடுக்க வேண்டும். இதனுள் பைல்களைப் போட அந்த பைல்களை கர்சரால் அழுத்தி இழுத்துவிட்டால் போதும். இவற்றை நீக்க வேண்டும் என்றாலும் இவற்றை இழுத்து ட்ரேஷ் ஐகானில் விட்டுவிட லாம்.

இந்த பைல்களை மீண்டும் பெற எந்த கம்ப்யூட்டரிலிருந் தும் இணைய இணைப்பு பெற்று இந்த தளம் சென்று உங்கள் பாஸ்வேர்டைப் பயன்ப டுத்தி உங்களுக்கான டிஸ்க் இடத்தைப் பார்க்கலாம். அதில் நீங்கள் பைல்களை எப்படி வைத்தீர்களோ அப்படியே இருக்கும்.

எந்த பைல் வேண்டுமோ அதன் மீது ரைட் கிளிக் செய்து பின் Download என்ற பட்டனை அழுத்துங்கள். பின் அதனை அந்தக் கம்ப்யூட்ட ரில் சேவ் செய்து பயன்படுத்த லாம். அல்லது டவுண்ட்லோட் செய்திடாமல் உங்கள் விர்ச்சு வல் ஹார்ட் டிஸ்க்கில் வைத்தப டியே திறந்து பயன்படுத்தலாம்.

உங்கள் கம்ப்யூட்டரில் உள்ள பைல்கள் தாமாக உங்கள் முயற்சி எதுவுமின்றி பேக் அப் எடுக்கப்பட வேண்டும் என் றால் கட்டணத்துடன் இந்த வச தியினைப் பெறலாம். மாதம் ரூ.350 கட்டணமாகச் செலுத்த வேண்டும். செலுத்துபவர்க ளுக்கு 50 ஜிபி இடம் தரப்படுகி றது.

எப்போது கடைசியாக பேக் அப் செய்தோம் என்ற கவ லையே இல்லாமல் இருக்க லாம். ஏனென்றால் நீங்கள் எப் போது இணைய இணைப்பில் இருக்கிறீர்களோ அப்போ தெல்லாம் இந்த தளம் தந்த ஆட்டோமேடிக் பேக் அப் புரோ கிராம் இயங்கி உங்கள் பைல்க

ளுக்கு பேக் அப் காப்பி எடுத்து வைக்கும்.

கார்பனைட் (Carbonite www.carbonite.com) என்னும் தளம் ஆட்டோமேடிக் பேக் அப் வசதியை வழங்குகிறது. எவ்வளவு வேண்டுமானாலும் எந்த அளவில் வேண்டுமானாலும் பைல்களை இதில் பேக் அப் எடுத்து வைக்கலாம். கட்டணம் ரூ.2,500. இதனுடைய ஆட்டோ பேக் அப் சாப்ட்வேர் மிகவும் எளிமையானதாக உள்ளது.

இதனை வாங்கிக் கொண்டால் கம்ப்யூட்டரில் உருவாக்கும் எந்த ஒரு பைலையும் ரைட் கிளிக் செய்தால் அந்த பைல் பேக் அப் எடுக்க வேண்டுமா என்ற ஒரு ஆப்ஷன் கிடைக்கும்.

இத்தகைய வாதி தரும் இன்னொரு தளம் டினோ (Diino www.diino.com) இதுவும் இலவச பேக் அப் வசதியைத் தருகிறது. இந்த தளம் தரும் சாப்ட்வேர் புரோகிராம் மூலம் எளிதாக பைல்களை பேக் அப் வசதிக்கு அனுப்ப முடிகிறது. நமக்கென ஒரு பெர்சனல் வெப்சைட் கிடைக்கிறது. எடுத்துக் காட்டாக அதன் பெயர் (http://yourusername.diinoweb.com) என இருக்கும். நீங்கள் பேக் அப் எடுக்கும் பைல்கள் இந்த தளத்தில் சேவ் செய்து வைக்கப்படும்.

ஒரு வேளை இந்த பைல்களை மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்ளலாம் என்றால் அவர்களுக்கு இந்த இணைய முகவரியினையும் பாஸ்வேர்டினையும் தந்து பகிர்ந்து கொள்ள வழி வகுக்கலாம்.

ஆன்லைன் பேக் அப் வசதிகள் எப்போதும் நிம்மதியான, செலவற்ற பேக் அப் வழிகளைத் தருகிறது. கம்ப்யூட்டர் எப்போது கிராஷ் ஆகி நம் பைல்களுக்கு சமாதி கட்டும் எனத் தெரியாது. எப்போது வேண்டுமானாலும் அது நடக்கலாம். எனவே இறுமாப்புடன் இல்லாமல் இத்தகைய ஒரு இலவச வசதியைப் பயன்படுத்துவதே நல்லது.

கேள்வி பதில்

கேள்வி: நான் இப்போது இன்டர்நெட் எக்ஸ்புளோரர் மற்றும் அவுட்லுக் எக்ஸ்பிரஸ் பயன்படுத்துவதே இல்லை. இருந்தாலும் விண்டோஸ் அப்டேட் எனக்கு வந்து கொண்டே இருக்கிறது. இந்த அப்டேட் பைல்கள் எனக்குத் தேவையா? அல்லது இவற்றை எல்லாம் இயங்க முடியாதவையாக மாற்றிவிடவா?

–நீ. தனப் பெருமாள், சின்னாளபட்டி

பதில்: சிந்திக்க வைக்கும் கேள்வி இது. பாராட்டுகிறேன். இது குறித்து பல வாசகர்கள் வெவ் வேறு கோணங்களில் கேட் டுள்ளனர். இந்த பிரச்னையை இப்போது பல்வேறு பார்வைகளில் பார்க்கலாம். நம் அனைவருக்கும் தெரிந்த ஒரு விஷயம் மைக்ரோசாப்ட் ஒவ்வொரு மாதத் தொடக்கத்திலும் சிஸ்டம் அப்டேட் பைல்கள் அனுப்புவது. இவற்றைப் பயன்படுத்தி நாம் நம் கம்ப்யூட்டர்களைப் பாதுகாப்பாக இயக்கலாம். பல வேளைகளில் கம்ப்யூட்டருக்கான பாதுகாப்பு குறித்த அப்டேட் பைல்களுடன் மைக்ரோசாப்ட் நிறுவனத்தின் மற்ற அப்ளிகேஷன் புரோகிராம்களான விண்டோஸ் எக்புளோரர் மற்றும் அவுட்லுக் எக்ஸ்பிரஸ் தொகுப்புகளுக்கான அப்டேட் பைல்களும் வருகின்றன. இப்போது அதிகமான எண்ணிக்கையில் பிரவுசர்களும் இமெயில் கிளையண்ட் புரோகிராம்களும் பயன்பாட்டில் உள்ளதால் மைக்ரோசாப்ட் நிறுவனம் தருவதனை அவ்வளவாக யாரும் பயன்படுத்துவதே இல்லை. இருந்தாலும் அவர்களுக்கும் இந்த அப்டேட்டட் பைல்கள் அனுப்பப்பட்டுக் கொண்டே இருக்கின்றன. எனவே இவற்றை நாம் ஏன் டவுண்லோட் செய்து இன்ஸ்டால் செய்திட வேண்டும் என்கிற கேள்வி எழுகிறது. இதற்கான விடை உங்களுக்கு ஆச்சரியத்தைத் தரலாம்.



நம் கம்ப்யூட்டருக்கு இந்த அப்டேட் பைல்கள் நீங்கள் கூறிய புரோகிராம்களைப் பயன்படுத்தவில்லை என்றாலும் தேவைப்படுகின்றன. இவை உங்கள் ஆப்பரேட்டிங் சிஸ்டத்தின் ஒரு பகுதியாகக் கருதப்பட வேண்டியவை. குறிப்பாக இன்டர்நெட் எக்ஸ்புளோரருக்கு இது தேவை. இன்டர்நெட் எக்ஸ்புளோரர் பிரவுசரை நீங்கள் பயன்படுத்தா விட்டாலும் அதில் உள்ள சில பைல்கள் விண்டோஸ் ஆப்பரேட்டிங் சிஸ்டத்தை இயக்க பயன்படுகின்றன. அது ஒரு வெப் பிரவுசருக்கு மேலாக விண்டோஸ் இயக்கத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

இன்டர்நெட் எக்ஸ்புளோரர் மட்டுமின்றி வேறு சில புரோகிராம்களும் இந்த அப்டேட் பைல்களில் தரப்படுவதனைப் பயன்படுத்துகின்றன. எடுத்துக் காட்டாக எச்.டி.எம்.எல். ரென்டரிங் இஞ்சின் இந்த அப்டேட் பைல்களில் உள்ளதைப் பெரும் அளவில் பயன்படுத்துகிறது. எனவே அப்டேட் செய்ய மறுத்தால் எச்.டி.எம்.எல். வகை வெளிப்பாட்டில் பிரச்சினை ஏற்படலாம். எனவே ஒவ்வொரு மாதமும் அப்டேட் பைல்களை டவுண்லோட் செய்து அவை முறையாக இன்ஸ்டால் ஆகிறதா என்பதனைப் பார்க்கவும்.

இந்த வார டவுண்லோட்

வித்தியாசமான ஒரு புரோகிராம்

அண்மையில் இணையத்தில் பிரவுஸ் செய்து கொண்டிருந்த போது வித்தியாசமான புரோகிராம் ஒன்றைச் சந்திக்க நேர்ந்தது.

அதன் பெயர் Unchrome. கூகுளின் குரோம் பிரவுசர் தொகுப்பினைப் பிடிக்காத யாரோ இதனை வடிவமைத்து வழங்கியது போல் முதலில் தோன்றியது. ஆனால் இந்த தொகுப்பு செயல்படுவதற்கான காரணங்களைப் படித்த போது இதுவும் சரிதான் என்று எண்ணத் தோன்றியது.

கூகுள் தந்துள்ள குரோம் பிரவுசர் தற்போதைக்கு இயங்கும் பிரவுசர்களில் மிகவும் வேகமாக இயங்கும் பிரவுசர் தான். பல புதிய வசதிகளையும் இது தந்துள்ளது என்பதுவும் உண்மையே. ஆனால் இந்த பிரவுசர் நம்மைப் பற்றி பல பெர்சனல் தகவல்களைப் பெற்றுக் கொள்கிறது. இதனை கூகுள் பாதுகாப்பாக பயன்படுத்துமா என்று சந்தேகம் வந்ததாலேயே இந்த புரோகிராம் எழுதப்பட்டிருக்கிறது என்று தெரிய வருகிறது. கூகுள் அதன் வாடிக்கையாளர்களை அது தந்துள்ள அடையாள எண் மூலம் தான் யார் எனத் தெரிந்து கொள்கிறது.

இந்த புரோகிராமைப் பயன்படுத்துகையில் அந்த அடையாள எண்ணை அழித்து விடுகிறது. இதனால் நம் பெர்சனல் தகவல்கள் கூகுள் நிறுவனத்திற்குக் கிடைக்காமல் போய் விடுகிறது என்று இதனை அமைத்தவர்கள் கூறுகின்றனர்.

உங்களுக்கும் இதே போன்று சந்தேகம் வந்து கூகுளில் உள்ள உங்கள் அடையாள எண்ணை நீக்க வேண்டும் என்றால் கீழ்க் காணும் முறையில் செயல்படவும்.

1. முதலில் குரோம் பிரவுசர் இயங்கிக் கொண்டிருந்தால் அதனை நிறுத்தவும். பின் வேறு ஒரு பிரவுசர் மூலம் http://www.abelssoft.net/unchrome.exe என்ற முகவரிக்குச் செல்லவும்.
2. இங்கு கிடைக்கும் UnChrome சாப்ட்வேர் தொகுப்பினை டவுண்லோட் செய்திடவும். இதனை அப்படியே இயக்கலாம். அல்லது சேவ் செய்து வைக்கலாம்.
3. இயக்கத் தொடங்கினால் ஒரு ஸ்கிரீன் கிடைக்கும்.

4. பின் Remove Unique ID Now என்ற இடத்தில் கிளிக் செய்திடவும். பின் ஓகே அழுத்தி வெளியேறவும். இதற்கு முன் குரோம் பிரவுசர் மூடப்பட்டிருக்க வேண்டும் என்பதனை நினைவில் கொள்க.
5. அடுத்து உங்கள் கம்ப்யூட்டர் திரையில் கீழ்க்காணும் காட்சி கிடைக்கும்.

6. இனி என்ன? குரோம் பிரவுசரை நீங்கள் தொடர்ந்து பயன்படுத்தலாம். ஆனால் அந்த பிரவுசரால் உங்களை அடையாளம் காண முடியாது. அவ்வளவே என்று இந்த அன்குரோம் தளத் தில் கூறப்பட்டுள்ளது.

விண்டோஸ் 7 வரை

எக்ஸ்பியைக் காப்பாற்றுவோம்

விண்டோஸ் விஸ்டா அவ்வளவாக மக்கள் மனதிலும் பயன்பாட்டிலும் இடம் பிடிக்காமல் போனதற்குக் காரணம் விஸ்டா அதிவேக ப்ராசசரில் மட்டுமே சரியாகச் செயல்பட்டது. ஆனால் விண்டோஸ் எக்ஸ்பி இன்றும் பலவாறான மக்களின் நண்பனாக பெர்சனல் கம்ப்யூட்டர்களில் இயங்கி வருகிறது.

புதிய கம்ப்யூட்டர் வாங்கியவர்கள் கூட அதனுடன் வந்த விஸ்டாவைக் கழற்றிவிட்டு விண்டோஸ் எக்ஸ்பியைத் தொடர்ந்து வைத்துக் கொண்டனர். இப்போது விண்டோஸ் 7 வரப்போவதாக அறிவிப்புகள் வந்து கொண்டிருக்கின்றன. இன்னொரு புறம் மைக்ரோசாப்ட் விண்டோஸ் எக்ஸ்பிக்கு இனிமேல் லைசன்ஸ் கிடைக்காது என்று சொல்லி வருகிறது. மேலும் இதற்கு அளிக்கும் தொழில் நுட்ப உதவியையும் ஒரு நாளில் நிறுத்திவிடும். அப்படியானால் அடுத்த ஆப்பரேட்டிங் சிஸ்டத்திற்கு மாறித்தான் ஆக வேண்டுமா? அது உங்கள் கம்ப்யூட்டர் செயல்பாடு மற்றும் தேவைகளைப் பொறுத்தது.

விண்டோஸ் 7 என்ன தரப் போகிறது? பழைய ஆப்பரேட்டிங் சிஸ்டம் மற்றும் பழைய ஆபீஸ் தொகுப்புகளுடனான அதன் உறவு எப்படி இருக்கும் என்பதைப் பொறுத்தே விண்டோஸ் எக்ஸ்பியிலிருந்து விண்டோஸ் 7க்கான மாற்றம் இருக்கும். அப்படியானால் அதுவரை விண்டோஸ் எக்ஸ்பியைக் காப்பாற்றியாக வேண்டுமே? காப்பாற்றுவது என்றால் என்ன? அதற்கு என்ன நடவடிக்கை எடுக்க வேண்டும்? என்பதைப் பார்ப்போமா!

நீங்கள் பதினைந்து ஆண்டுகளுக்கு முன் வாங்கிய காரினைத் தொடர்ந்து பயன்படுத்தி வருகின்றீர்கள். ஒரு நாள் இஞ்சினில் பிரச்சினை வர அந்நிறுவனத்தின் அத்தாட்சி பெற்ற ஒர்க்ஷாப்புக்கு போகிறீர்கள். அவர்கள் என்ன சொல்கிறார்கள். இதற்கு இப்போதெல்லாம் ஸ்பேர் பார்ட்ஸ் வருவதில்லை, சார். ஏன் இன்னும் இதை வைத்திருக்கிறீர்கள். ஏதேனும் இதோடு வந்த வண்டி இஞ்சின் பிரிப்பதாக இருந்தால் அங்கே சொல்லி வைத்து இந்த ஸ்பேர் பார்ட் வாங்கணும் சார் என்று சொல்லி நம்மை சிக்க வைக்கிறான். எனவே பழைய காரை ரோட்டில் ஓட்டலாம்; ஆனால் நின்றுவிட்டால் அதற்கான உபரி சாதனம் இல்லை என்றால் அவ்வளவுதானே? அதே போல்தான் விண்டோஸ் எக்ஸ்பி தொகுப்பும். ஒன்றிரண்டு ஆண்டுகளில் ஏதேனும் டிரைவர் புரோகிராம் அல்லது சில முக்கிய பைல்கள் இல்லை என்னும் சூழ்நிலை வந்தால் என்ன செய்வது? அதுவும் மைக்ரோசாப்ட் ஏதேனும் ஓர் ஆண்டில் இனிமேல் எக்ஸ்பிக்கு சப்போர்ட் கிடையாது என்று நிச்சயமாய்ச் சொல்லும். அப்போது என்ன செய்வது? அதனால் இன்றைய நிலையில் அப்படிப்பட்ட சூழ்நிலைகளைச் சமாளிக்க தேவையான வழிகளைக் காணலாம்.

உங்களுக்கு எக்ஸ்பி இயக்கத்தினைச் சார்ந்த டிரைவர் பைல் ஏதேனும் தேவையா? கவலையே படவேண்டாம். www.driverpacks.net/DriverPacks என்ற இணைய தளத்தை நாடவும். DriverPacks என்பது ஒரு ஓப்பன் சோர்ஸ் ப்ராஜக்ட். விண்டோஸ் எக்ஸ்பி ஆப்பரேட்டிங் சிஸ்டத்திற்குத் தேவைப்படும் அனைத்து டிரைவர்களையும் ஒரே மேடையில் தரும் அருமையான தளம் இது. இந்த தளம் சென்றால் பல்வேறு தலைப்புகளில் டவுண்லோட் செய்யக் கூடிய டிரைவர் பைல்களைக் காண

லாம்.சிப்செட், சி.பி.யு.,கிராபிக்ஸ், லேன், மாஸ் ஸ்டோரேஜ், சவுண்ட் மற்றும் டபிள்யூலேன். இந்த பிரிவுகளில் உள்ள அனைத்து பைல்களையும் நம் கம்ப்யூட்டரில் உள்ள காலியாக உள்ள ஒரு டைரக்டரியில் பதிந்து வைத்துக் கொள்ளலாம். மொத்த பைல் கொள்ளளவு 336 எம்பி இருக்கும். அனைத்து பைல்களும் .7z என்ற துணைப் பெயருடன் முடியும். இந்த பைல்களை 7zip என்ற புரோகிராம் மூலம் விரித்து வைக்கலாம். விரிப்பதற்கு வேண்டிய 7zip புரோகிராம் www.7zip.org என்ற இணைய தளத்திலிருந்து கிடைக்கிறது.

இந்த தளத்திலிருந்து அனைத்து 10 பேக் பைல்களையும் இறக்கிப் பின் விரித்த பின்னர் டவுண்லோட் செய்யப்பட்ட அனைத்து ஸிப் பைல்களையும் இன்னொரு டைரக்டரிக்குப் பத்திரமாக மாற்ற வேண்டும். பின் விரித்த பைல்கள அனைத்தையும் ஒரு டிவிடியில் காப்பி செய்து வைக்க வேண்டும்.

இந்த டிரைவர் புரோகிராம்களை எப்போதெல்லாம் உங்களுக்கு விண்டோஸ் எக்ஸ்பி புரோகிராமினை ரிப்பேர் செய்கிறீர்களோ அப்போதெல்லம் தேவைப்பட்டால் பயன்படுத்திக் கொள்ளலாம். இந்த டிவிடிக்கும் பேக் அப் காப்பி எடுத்து வைத்துக் கொள்வது நல்லது.

இன்டர்நெட்டிலிருந்து டிரைவர் பைல்களை எடுப்பது மட்டுமின்றி இன்னொரு வேலையையும் நாம் மேற்கொண்டாக வேண்டும். உங்களுடைய அனைத்து சாப்ட்வேர் சிடிக்களுக்கும் ஹார்ட்வேர் இன்ஸ்டலேஷன் சிடிக்களுக்கும் காப்பி சிடி எடுத்து வைத்திருக்க வேண் டும். இத்தகைய சிடிகளுக்கு ஒரு ஐ.எஸ்.ஓ. இமேஜ் சிடியில் வைத்திருப்பதுவும் நல்லது. இவ்வாறு தயாரித்த சிடிக்களையும் பத்திரமான இடத்தில் வைக்க வேண்டும். பின் தேவைப்படும்போது இவை எப்போதும் கிடைப்பவையாக இருக்க வேண்டும். எங்கோ மிக மிகப் பத்திரமாக வைத்தேன்; ஆனால் எங்கே வைத்தேன் என்று தெரியவில்லை என குழம்பக் கூடாது.

இவை மட்டுமின்றி உங்கள் ஆப்பரேட்டிங் சிஸ்டத்திற்கு ப்ராடக்ட் கீ ஒன்று தரப்பட்டிருக்கும். இதனை www.magicalijellybean.com என்ற முகவரியில் உள்ள தளத்திற்குச் சென்று பெறலாம். இந்த தளம் உங்கள்

விண்டோஸ் எதிர்காலம் என்ன?

மைக்ரோசாப்ட் நிறுவனத்தின் துணைத் தலைவர் விண்டோஸ் இயக் கத்தின் எதிர்காலம் பற்றி ஒரு கட்டுரை எழுதி உள் ளார். அதில் விண்டோஸ் இயக்கத் தொகுப்பின் எந்த பதிப்பு எப்போது காலாவதியாக்கப்படும் என்று குறிப்பிட்டுள்ளார். அத்துடன் விண்டோஸ் பதிப்புகளுக்கு எந்த நாள் வரையில் தொழில் நுட்ப உதவி அளிக்கப்படும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

சென்ற ஆண்டு ஜூலை மாதம் விண்டோஸ் எக்ஸ்பி சில்லரையாக விற்பனை செய்யப் பட்டது நிறுத்தப்பட்டது. பெர்சனல் கம்ப்யூட்டர் தயாரிப்பாளர்களுக்கு எக்ஸ்பி லைசன்ஸ் வழங் குவதும் முடிவிற்குக் கொண்டுவரப்பட்டது. ஆனால் பொது மக்கள் வேண்டுகோளுக்கிணங்க 2009 ஜனவரி 31 வரை விண்டோஸ் ஆப்பரேட்டிங் சிஸ்டம் வாங்கிக் கொள்ளலாம் என்று அறிவிக்கப்பட்டது.

அதுவும் குறிப்பிட்ட சில நிறுவனங்களுக்கு மட் டுமே இந்த உரிமை வழங்கப்பட்டது. அதுவும் தாங்கள் வாங்கும் ஆப்பரேட்டிங் சிஸ்டத்தினை டவுண்கிரேட் செய்திட விரும்புபவர்களுக்கு மட்டுமே இந்த உரிமை வழங்கப்பட்டது.

அதாவது விண்டோஸ் எக்ஸ்பி தொகுப்பு காப்பி வேண்டும் என்றால் விஸ்டா தொகுப்பு வாங்கி அதனை விண்டோஸ் எக்ஸ்பிக்கு மாற்ற கம்ப் யூட்டர் தயாரித்து வழங்குபவரிடம் அனுமதி பெற வேண்டும்.

விண்டோஸ் எக்ஸ்பி சிஸ்டத்தினைப் பொறுத்தவரை மைக்ரோசாப்ட் இன் னொரு சலுகையினையும் தருகிறது. மிகக் குறைந்த விலை கம்ப்யூட்டர் வாங்குபவருக்கு 2010 ஆம் ஆண்டு வரை விண் டோஸ் எக்ஸ்பி ஹோம் மற்றும் விண்டோஸ் ஸ்டார்ட்டர் எடிஷன் இயக்கத் தொகுப்புகளை விற்பனை செய்திட முன்வந்துள்ளது.

இவர்களுக்கு மட்டும் நீட்டிப்புத் திட்டத்தின் கீழ் 2014 வரை தொழில் நுட்ப உதவி வழங்கப்படும். மற்றவற்றிற்கு 2009 ஏப்ரல் வரை மட்டுமே வழங்கப்படும். சிக்கலான பிரச்னைகளுக்கான தீர்வாக அப்டேட் தொகுப்புகள் வரும் 2014 வரை வழங்கப்படும்.

விண்டோஸ் தொகுப்பின் அடுத்த கட்டமான விண்டோஸ் 7 இந்த ஆண்டில் வெளியாகலாம். ஆனால் தாமதம் என்பது மைக்ரோசாப்ட் நிறுவனத்தைப் பொறுத்தவரை அடுத்தடுத்து ஏற்படும் ஒன்றாகும். ஏதேனும் ஒரு சிக்கல் உருவாகி அதனைத் தீர்ப்பதற்கான புரோகிராம் மாறுதல்களினால் இயக்கத் தொகுப்புகள் காலதாமதமாக வெளிவந்துள்ளன.

விண்டோஸ் 7 தொகுப்பின் சோதனைத் தொகுப்புகள் தற்போது சாப்ட்வேர் தயாரிக்கும் நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டு வருகின்றன. அவற்றைக் கவனிக்கையில் இந்த ஆண்டு விண்டோஸ் 7 வெளியாகும் எனவே அனைவரும் எதிர்பார்க்கின்றனர்.

கம்ப்யூட்டரை ஸ்கேன் செய்து உங்கள் விண்டோஸ் எக்ஸ்பி, ஆபீஸ் மற்றும் வேறு புரோகிராம்களுக்குண்டான ப்ராடக்ட் கீகளைக் கொடுக்கும்.

அடுத்ததாக உங்கள் கம்ப்யூட்டரில் அதிக எண்ணிக்கையில் கேம்ஸ்களைப் பதிந்து வைத்திருப்பீர்கள். பல கேம்ஸ்களை விளையாடாமலேயே வைத்திருப்பீர்கள். இவை உங்கள் ஹார்ட் டிஸ்க்கின் இடத்தை வீணடிக்கும் வகையில் அதில் அமர்ந்திருக்கும். கண்ட்ரோல் பேனல் சென்று இந்த கேம்ஸ் அனைத்தையும் நீக்கிவிடுங்கள். அவ்வாறு நீக்குகையில் ஏதேனும் சில பைல்கள் இருக்கட்டுமே என்று அன்இன்ஸ்டால் புரோகிராம் கேட்டால் விட்டுவிடுங்கள்.

இவ்வளவும் செய்த பின்னர் உங்கள் ரெஜிஸ்ட்ரியில் தேவையில்லாத பல வரிகள் அப்படியே இருக்கும். இவற்றையும் நீக்க வேண்டும். ஏனென்றால் சிஸ்டம் இயங்குவதன் வேகத்தை இவை கட்டுப்படுத்தும். இதற்கு CCleaner போன்ற புரோகிராமினைப் பயன்படுத்தலாம். CCleaner புரோகிராம் www.ccleaner.com என்ற இணைய தளத்தில் இலவசமாகக் கிடைக்கிறது. இந்த புரோகிராம் ரெஜிஸ்ட்ரியைக் கிளீன் செய்வதுடன் தற்காலிக இன்டர்நெட் பைல்கள், குக்கீஸ், லாக் பைல்கள், செக் டிஸ்க் துண்டு பைல்கள் போன்றவற்றை நீக்கிவிடும்.

இவற்றை முடித்தவுடன் Accessories, System Tools சென்று Disk Cleanup மற்றும் Disk Defragmenter டிஸ்க் டிபிராக்மெண்டர் ஆகிய புரோகிராம்களை இதே வரிசையில் இயக்குவது நல்லது.

மேலே சொல்லப்பட்ட அனைத்து செயல்பாடுகளையும் மேற்கொள்வது உங்கள் எக்ஸ்பி இயக்கத்தினை முழுமையான ஒரு செயல்பாடுள்ள இயக்கமாக மாற்றும். அதன் இயக்கத்திற்கு உள்ளாக உள்ளவை கெடுதல் எதுவும் தராமல் இருக்கும்.

தற்போது எக்ஸ்டெர்னல் ஹார்ட் டிஸ்க்குகள் புழக்கத்தில் உள்ளன. யு.எஸ்.பி.போர்ட்டில் இணைத்து எளிதாக இயக்கலாம். இந்த எக்ஸ்டெர்னல் டிஸ்க்குகளில் பேக் அப் புரோகிராம் பதிந்து தரப்படுகிறது. இதனை கம்ப்யூட்டருடன் இணைத்து இயக்கினால் உங்களுடைய பைல்களுக்கு பேக் அப் காப்பி வெளியே உள்ள டிஸ்க்கில் உருவாக்கப்படும். இவற்றுடன் நீங்களாகவும் பைல்களை பேக் அப் செய்திடலாம். அதிக கொள்ளளவு உள்ள மெமரி கீகள் தற்போது குறைந்த விலையில் கிடைக்கின்றன. இவற்றை மேனுவல் பேக் அப் செய்திடப் பயன்படுத்தலாம். 4 ஜிபி கீகள் ரூ.600க்குக் கிடைக்கின்றன.

உங்களுக்குக் கூகுள் மெயில் அக்கவுண்ட் இருந்தால் (அல்லது ஒன்றை உருவாக்கி) முக்கிய மெயில்களை உங்கள் இமெயில் அக்கவுண்ட்டிற்கு மெயில் செய்து வைக்கலாம். கூகுள் மெயில் சர்வர் நிறைய இடம் தருவதால் பிரச்சினை எதுவும் இருக்காது. அல்லது இலவசமாக டிஸ்க் இடம் தரும் ஆன்லைன் பேக் அப் சர்வீஸ் தளங்களைப் பயன்படுத்தலாம். (இதே மலரில் வேறு ஒரு பக்கத்தில் இது குறித்து வெளியாகியுள்ள கட்டுரையைப் படிக்கவும்.)

எக்ஸ்பி தரும் ஒரு சிறப்பு அம்சம் அதன் ரெஸ்டோர் பாய்ண்ட். எப்போது புதிய புரோகிராம் ஒன்றினை நீங்கள் இன்ஸ்டால் செய்தால் அது ஒரு ரெஸ்டோர் பாய்ண்ட் ஒன்றை உருவாக்கும்.

அந்த புரோகிராமினால் பிரச்சினை வந்தால் அந்த பாய்ண்ட்டிற்கு கம்ப்யூட்டரைக் கொண்டு சென்று இயக்கலாம். இது போல ரெஸ்டோர் பாய்ண்ட் எதுவும் உருவாக்கப்படவில்லை என்றால் நீங்களாகவே இந்த பாய்ண்ட்களை அவ்வப்போது உருவாக்கி வைப்பது நல்லது. வேறு எந்த பிரச்சினையினாலாவது கம்ப்யூட்டர் கிராஷ் ஆனால் இந்த பாய்ண்ட்கள் நமக்குக் கை கொடுக்கும். இதனை உருவாக்க Accessories >> System Tools >> System Restore எனச் சென்று உருவாக்கவும்.

எக்ஸ்பி தொகுப்பின் இயக்கத்திற்கு இன்றைக்கு அதிக ஆபத்து வைரஸ்களால் தான் ஏற்படுகிறது. நல்ல ஆண்டி வைரஸ் தொகுப்பு ஒன்றை எப்போதும் நிறுவுவது நல்லது.

கட்டணம் செலுத்தி வாங்க முடியாதவர்கள் இலவச ஆண்டி வைரஸ் தொகுப்பு ஒன்றினை அமைத்துக் கொள்வது நல்லது.

அவ்வகையில் AVG Anti Virus Free Edition தொகுப்பு மிகச் சிறந்த ஒன்றாக அனைவராலும் கருதப்படுகிறது. இதனை டவுண் லோட் செய்து கம்ப்யூட்டரில் பதிந்து விட்டால் இது கம்ப்யூட்டரில் பின்னணியில் இயங்கிக் கொண்டு உங்கள் கம்ப்யூட்டருக்குள் வரும் வைரஸ் புரோகிராம்களை வழியிலேயே மடக்கி அழித்துவிடும். உங்களுக்கும் அறிவிக்கும்.

இந்த புரோகிராமினை www.avg.com என்ற முகவரியில் உள்ள தளத்திலிருந்து இலவசமாக இறக்கிக் கொள்ளலாம்.

ஆண்டி வைரஸ் பாதுகாப்பு ஏற்படுத்தினாலும் உங்கள் கம்ப்யூட்டரை உளவு பார்க்க அனுப்பப்படும் ஸ்பைவேர் புரோகிராம்களிலிருந்தும் கம்ப்யூட்டரைப் பாதுகாக்க வேண்டும்.

இதற்கு ஓர் அருமையான இலவச புரோகிராம் கிடைக்கிறது. இதன் பெயர் Spybot Search and Destroy ஆகும். இதனை www.safernetwork-ing.org என்ற தளத்திலிருந்து இலவசமாகப் பெறலாம்.

வேர்ட் - டிப்ஸ்

சென்ற இதழில் வேர்ட் தொகுப்பில் அதிகம் பயன்படுத்தக் கூடிய சில டிப்ஸ்கள் கொடுக்கப் பட்டன. அவற்றைப் படித்த வாசகர்கள் தாங்களும் சில டிப்ஸ் எழுதி இவையும் எல்லாரும் பயன்படுத்தக் கூடிய டிப்ஸாகக் கொள்ளலாமே என்று அனுப்பி இருந்தனர். பொதுவாக மைக் ரோசாப்ட் ஆபீஸ் தொகுப்பைப் பொறுத்தவரை டிப்ஸ் என்று கணக்கிட்டால் ஒவ்வொரு அப்ளிகேஷன் தொகுப்பிற்கும் அதிக எண்ணிக்கையில் கிடைக்கும். ஆனால் ஒரு சில சுருக்கு வழிகளே டாகுமெண்ட் செய்யப்பட்ட வகையில் அறியப்படாமல் பழக்கத்தினாலேயே அறிந்து பயன்படுத்துகிறோம். அவ்வகையில் இன்னும் சில டிப்ஸ்களை இங்கு தருகிறோம்.

1.டெக்ஸ்ட்டை மறைத்தல்: வேர்டைப் பொறுத்த வரை பல வகைகளில் குறிப்பிட்ட டெக்ஸ்ட்டை மற்ற வற்றிலிருந்து தனியே எடுப்பாக இருக்கும்படி அமைத்திடலாம். உங்களுக்குத் தெரியுமா? அதே வகையில் டெக்ஸ்ட்டை மறைத்தும் அவற்றைத் தனியாகக் காட்டலாம். இந்த வசதி Format மெனுவில் Font தேர்ந்தெடுத்த பின் நமக்குக் கிடைக்கிறது.இதனைப் பயன் படுத்தி சிறிய அளவில் நோட்ஸ் தயாரித்து மற்றவர்கள் அவற்றைப் படிக்காத வகையில் மறைத்து வைக்கலாம். இவ்வாறு மறைத்து வைக்கப்பட்ட டெக்ஸ்ட்டைப் பின் டாகுமெண்ட்டில் தெரியுமாறும் வைக்கலாம். இதற்கு Tools மெனு சென்று Options தேர்ந்தெடுக்க வேண்டும். பின் அதில் View மற்றும் Hidden Text தேர்ந்தெடுத்து கிளிக் செய்தால் மறைத்து வைக்கப் பட்ட டெக்ஸ்ட் தெரிய வரும். இந்த வசதியினைப் பயன்படுத்தி ஒரு உரையாற்றுகையில் அதனை அச்சில் பெறுபவருக்கு குறிப்பு டெக்ஸ்ட்டினை மறைத்தவாறே அச்செடுத்து தரலாம்.

2. பார்மட்டிங் நீக்க: பெரிய டாகுமெண்ட் ஒன்றில் ஒவ்வொரு இடத்திலும் அதன் கருத்திற் கேற்ப பல பார்மட்டிங் வழிகளை அமைத்திருக்கிறீர்கள். ஆனால் ஒரு நிலையில் குறிப்பிட்ட டெக்ஸ்ட் பகுதியில் உள்ள பார்மட்டிங் அனைத் தையும் நீக்க வேண்டும் என எண்ணுகிறீர்கள். ஒவ் வொன்றாக எடுத்து பார்மட் மட்டும் நீக்குவது என்றால் அது நேரத்தையும் நம் உழைப்பையும் அதிகம் எடுக்கும். இதற்கான சுருக்கு வழி ஒன்றுள்ளது. பார்மட்டிங் நீக்கி அதன் ஒரிஜினல் அமைப் பிற்குக் கொண்டு வர வேண்டிய டெக்ஸ்ட் அனைத்தையும் முதலில் தேர்ந்தெடுங்கள். பின் கண்ட்ரோல் + ஸ்பேஸ் பார் கீகளை அழுத்துங்கள். பார்மட்டிங் அனைத்தும் மறைந்துவிடும்.

3. சொந்த டெம்ப்ளேட் தயார் செய்திட: எம்.எஸ்.ஆபீஸ் தொகுப்பில் பல டெம்ப்ளேட்டுகள் தரப்பட்டுள்ளன. மைக்ரோசாப்ட் இணைய தளத்திலும் டெம்ப்ளேட்டுகள் நாம் பயன்படுத்துவதற்கு அமைக்கப்பட்டுள்ளன. இருப்பினும் ஒரு சில வேளைகளில் நாம் மிகக் கஷ்டப்பட்டு டாகுமெண்ட் ஒன்றை பலவகையான பார்மட்டிங் வழிகளுடன் அமைத்திருப்போம். அந்த பார்மட்டிங் வழி நமக்குப் பிடித்திருப்பதுடன் அந்த வகையிலேயே மற்ற டாகுமெண்ட்களை அமைக்க விரும்புவோம். இதற்கு ஒரே வழி இதனை ஒரு டெம்ப்ளேட் டாக அமைத்து பயன்படுத்துவதுதான். இதற்கு File மெனு சென்று Save As டயலாக் பாக்ஸை வரவழைக்க வேண்டும். அந்த பாக்ஸின் கீழாக வேர்ட் டாகுமெண்ட் என அமைக்காமல் Word Template என்பதனைத் தேர்ந் தெடுத்து அதற்கு ஒரு பெயரும் வழங்க வேண்டும். இப்போது இது ஒரு டெம்ப்ளேட் டாக அமைந்துவிடும். இனி இந்த வகையில் டாகுமெண்ட் அமைக்க விரும்பினால் இந்த டெம்ப் ளேட்டினைத் தேர்ந்தெடுத்து அமைக்கலாம்.

4. கட்டங்களை அமைத்து டெக்ஸ்ட், படம் அமைக்க: வேர்ட் தொகுப்பில் பக்கங்களை அமைக்கையில் டெக்ஸ்ட், வரை படங்கள், படங்கள், கிளிப் ஆர்ட் எனப் பல வகை அமைப்பை டாகு மெண்ட்டுக்குள் கொண்டு வர முயற் சிப் போம். அப்போது நமக்கு கோடுகள் அமைந்த கட்டங்கள் இருந்தால் இவற்றை சரியான இடத் தில் அமைத்து அழகாக டாகுமெண்ட்டை உருவாக்க வசதியாக இருக்கும். இதற்காக டெக்ஸ்ட்டின் ஒரு பகுதியாக கட்டங்கள் அமைத்தால் அவையும் அச்சில் வந்து டாகுமெண்ட்டின் அழகைக் கெடுத்துவிடும். இதற்குப் பதிலாகப் பின்னணியில் ஒரு கட்டம் அமைத்து அவை நீக்கப்படுவதற்கான வழியையும் அமைத்துத் தரலாம்.

இதற்கு View மெனுவில் Toolbars என்பதனைத் தேர்ந்தெடுக்கவும். பின் கிடைக்கும் பிரிவுகளில் Drawing என்பதில் கிளிக் செய்திடவும். இப்போது Drawing Toolbar கிடைக்கும். இதில் Draw என்பதில் கிளிக் செய்து பின் Grid என்பதைக் கிளிக் செய்திடவும். பின் உள்ள பிரிவில் ‘Display gridlines on screen’ என்பதைத் தேர்ந்தெடுத்து நெட்டு வாக்கிற்காகவும் படுக்கை வாகிற்காகவும் ஒரு அளவைத் தேர்ந்தெடுத்து அமைக்கவும்.

இதன் பின் OK கிளிக் செய்து வெளியேறவும். இந்த கிரிட் கட்டம் தோற்றத்தில் மட்டும் வைத்துப் பயன்படுத்தும் வகையில் நமக் குக் கிடைக்கும். இதனைப் பயன்படுத்தி நாம் டெக்ஸ்ட் உட்பட படங்கள், வரைபடங்கள், போட்டோக்கள் போன்றவற்றைச் சரியாக அமைக்கலாம்.

5. டாகுமெண்ட்டைப் பிரிக்கக் கோடு: டாகுமெண்ட்டின் ஒவ்வொரு பிரிவிற்கு இடையே கோடுகளை அமைத்துப்பார்ப்பது டாகுமெண்ட்டிற்கு தெளிவான, பார்ப்பதற்கு கவர்ச்சியான தோற்றத்தைத் தரும். ஸ்பேஸ் மற்றும் பாரா தலைப்புகளைக் காட்டிலும் கோடுகள் வரைவது இன்னும் சிறப்பாக அமை

யும். இதற்கான சில சுருக்கு வழிகளும் உள்ளன. இடது பக்கமிருந்து வலது பக்கத் திற்குஎளிமையான ஒரு கோடுஅமைக்க மூன்று மைனஸ் (–) அடையாளங்களை அமைத்து என்டர் தட்டுங்கள். கோடு ஒன்று வரையப்படும். மூன்று ஈக்குவல் (=-)அடையாளங்களை அமைத்து என்டர் தட்டினால் இரட்டைக் கோடு கிடைக்கும். இதே போல டில்டே (~) அடையாளம் அலை அலையாய் ஒரு கோட்டினை அமைக்கும். இதே போல (#) மற்றும் வேறு அடையாளங்களை அமைத்து பரீட்சித்துப் பார்க்கவும். இந்த கோடுகளை வேண்டாம் என எண்ணினால் எப்படி நீக்குவது? கோட்டுக்கு மேலாக கர்சரைக் கொண்டு வரவும். பின் கண்ட் ரோல் + க்யூ அழுத்தவும். கோடு வரைவதில் இந்த ஏற்பாடு உங்கள் கம்ப்யூட்டரில் உள்ள வேர்ட் தொகுப்பில் கிடைக்கவில்லை என்றால் உள்ளே செட்டிங்ஸ் மாறி இருக்கலாம். இதனை மாற்ற கூணிணிடுண் மெனு திறக்கவும். பின் அதில் Auto corrections என்ற பிரிவைத் திறக்கவும். கிடைக்கும் டயலாக் பாக்ஸில் Auto format as you type என்ற பிரிவில் Border Lines பாக்ஸுக்கு எதிராக டிக் அடையாளத்தை அமைக்கவும்.

6. ஒரே பக்கத்தில் அழுத்த: சிறிய டாகுமெண்ட்களை அமைக்கையில் ஒன்று அல்லது இரண்டு வரி க ள் மட்டும் தனியே ஒரு பக்கத்தில் அமைவது சரியாகக் காட்சி தராது. இதனையும் அதற்கு முந்தைய பக்கத்திற்குக் கொண்டு வந்தால் சரியாக இருக்கும். இதற்கு மார்ஜினை ஓரளவிற்குச் சுருக்க வேண்டும். பைல் மெனு சென்று பேஜ் செட் அப் செல்லவும். பின் மார்ஜின் டேப்பைப் பயன் படுத்தி மார்ஜின் அளவைக் குறைக்கலாம். அடுத்த வழி கோடுகளுக்கு இடையே உள்ள அளவினைச் சில இடங்களில் மட்டும் குறைப் பது. அல்லது மொத்த டாகு மெண்ட்டிலும் எழுத்தின் அளவைக் குறைக்கலாம். அல்லது டாகுமெண்ட்டின் மேல் மற்றும் கீழ் மார்ஜின் அளவை குறைக்கலாம். இதற்கு கர்சரை ஓரங்களில் தெரியும் இந்த அளவு கோட் டில் வைத்து சற்று இழுக்கலாம்.

எக்ஸெல் ஷார்ட் கட்ஸ்

எக்ஸெல் தொகுப்பில் செயல்படுகையில் நினைவில் வைத்துக் கொள்ள வேண்டிய சில ஷார்ட் கட் வழிகள் இங்கு தரப்படுகின்றன.

- **CTRL+SPACEBAR –** கர்சர் இருக்கும் நெட்டு வரிசை தேர்ந்தெடுக்கப்படும்.
- **SHIFT+SPACEBAR:** கர்சர் இருக்கும் படுக்கை வரிசை தேர்ந்தெடுக்கப்படும்.
- **CTRL+HOME:** ஒர்க் ஷீட்டின் தொடக்கத்திற்கு செல்ல
- **CTRL+END:** ஒர்க்ஷீட்டின் இறுதிக்குச் செல்ல
- **SHIFT+F3:** பார்முலாவில் ஒரு பங்ஷனை ஒட்ட
- **CTRL+A:** பார்முலா என்டர் செய்கையில் பங்ஷன் பெயர் டைப் செய்தவுடன் பார்முலா பேலட்டைக் காட்டும்
- **CTRL+A:** பார்முலா என்டர் அல்லது எடிட் செய்யாத போது அனைத்தையும் தேர்ந்தெடுக்கும்.
- **CTRL+'** : (சிங்கிள் லெப்ட் கொட்டேஷன் மார்க்) செல் வேல்யூ மற்றும் செல் பார்முலாவை அடுத்த டுத்துக் காணலாம்.
- **F11 or ALT-+-F1:** அப்போது உள்ள ரேஞ்ச் சார்ந்து சார்ட் தயார் செய்யப்படும்.
- **CTRL+; –** (செமிகோலன்) தேதியை இடைச் செருக
- **CTRL+:** (கோலன்) நேரத்தை இடைச் செருக
- **CTRL+ENTER:** தேர்ந்தெடுக்கப்பட்ட செல் ரேஞ்சில் அப்போதைய என்ட்ரி உருவாக்க
- **F5:** Go To டயலாக் பாக்ஸ் காட்ட
- **CTRL+1:** Format Cells டயலாக் பாக்ஸ் காட்ட
- **CTRL+C:** காப்பி செய்தல்
- **CTRL+V:** ஒட்டுதல்
- **CTRL+Z:** செயல்படுத்தியதை நீக்க
- **CTRL+S:** சேவ் செய்திட
- **CTRL+P :** பிரிண்ட் செய்திட
- **CTRL+O:** புதிய பைல் திறக்க போல்டரைக் காட்டும்

கேள்வி பதில்

கேள்வி: ஓர் இணைய பக்கம் முழுவதையும் எப்படி அச்செடுக்கலாம்? நான் இன்டர்நெட் எக்ஸ்புளோரர் பதிப்பு 6 பயன்படுத்துகிறேன். ஒவ்வொரு முறை நான் அச்செடுக்க முயற்சிக்கையிலும் வலது பக்க டெக்ஸ்ட் கட் ஆகிறது? இதற்கு என்ன தீர்வான வழி?

–கா. நூர்முகமது, காரைக்குடி

பதில்: எளிதான தீர்வு ஒன்று சொல்லட்டுமா? உடனே இன்டர்நெட் எக்ஸ்புளோரர் பதிப்பு 7க்கு மேம்படுத்திக் கொள்ளுங்கள். இன்டர்நெட் எக்ஸ்புளோரர் வெப்சைட்டில் இலவசமாக இதனைப் பெறலாம். அல்லது www.tinyurl.com/3242ra என்ற முகவரியில் உள்ள தளத்தில் இதனைப் பெறலாம். டூல் பாரில் பிரிண்டர் படம் உள்ளது அல்லவா? அதன் அருகே கீழாக அமைக்கப்பட்ட அம்புக் குறி ஒன்று இருக்கும். இதனைக் கிளிக் செய்து பிரிண்ட் பிரிவியூ பார்க்கவும். இதில் உள்ள 'Shrink to fit' என்ற ஆப்ஷன் தேர்ந்தெடுக்கவும். இதன்மூலம் பிரிண்ட் எடுப்பதனைச் சுருக்கி அமைக்கலாம்.

கேள்வி: நான் ஒரு பிளாஷ் டிரைவ் வாங்கிப் பயன்படுத்தத் தொடங்கி உள்ளேன். அதன் விலை வடிவமைப்பு குறித்து உங்கள் கம்ப்யூட்டர் மலரிலும் பிற பத்திரிக்கைகளிலும் படித்தேன். ஆனால் எத்தனை நாள் அது நீடித்து உழைக்கும் என யாரும் எழுதவில்லை. அதிக நாள் இது உழைக்க நான் என்ன செய்ய வேண்டும்?

–எஸ். சுமதி, மதுரை

பதில்: நல்ல கேள்வி. சிடிக்களில் பைல்களைப் பதிந்து எடுத்துச் செல்வதைக் காட்டிலும் பென் டிரைவ்களில் பதிந்து எடுத்துச் செல்வதனையே அனைவரும் விரும்புகின்றனர். மீடியாவின் அளவு, விரைவு நம்மை இதனைப் பயன்படுத்த அழைக்கிறது. ஆனால் பிளாஷ் டிரைவ் எத்தனை நாட்களுக்கு வரும் என யாரும் எண்ணுவதில்லை. தொடர்ந்து அது உடைந்து போகும் வரை இருக்கும் என்றே அனைவரும் எண்ணுகிறோம். மேலும் பிளாஷ் டிரைவ் குறித்து நமக்குக் கிடைக்கும் குறிப்புகளும் அதன் வடிவமைப்பு, கொள்ளளவு மற்றும் விலை ஆகியன குறித்துத்தான் இருக்கின்றன. ஒரு குறிப்பிட்ட டிரைவ் எத்தனை மாதம் அல்லது ஆண்டு பயன்படும் அல்லது எந்த அளவில் பயன்படுத்தினால் நிலைத்து நிற்கும் என்றெல்லாம் எழுதுவதில்லை தான்.

ஒரு பிளாஷ் டிரைவில் பைல்களை எழுதி அழித்து மீண்டும் எழுதுகிறோம். எனவே இதுவும் ஒரு நாள் எழுத முடியாத நிலையில் நின்றுவிடும். எத்தனை முறை இதில் எழுதலாம். சில நூறாயிரம் முறை எழுதலாம். நீங்கள் எப்படி, எந்த அளவிலான பைல்களை எழுதுகிறீர்கள் என்பதைப் பொறுத்தே இதன் வாழ்நாள் அமையும். ஒரு லட்சம் முறை எழுதி அழித்தாலே போதுமே நாம் செலுத்திய விலைக்கு என்று கூறும் கருத்தும் உள்ளது. எனவே இதனைக் கருத்தில் கொண்டு நாம் பிளாஷ் டிரைவினைப் பயன்படுத்தலாம். ஒரு சில நிறுவனங்களின் டிரைவ்கள் சில ஆண்டுகள் வரை நன்றாக உழைக்கின்றன. பின் எழுதும் படிக்கும் வேகத்தில் மாற்றம் ஏற்படுகிறது. இதுவே அது ஓயப் போகிறது என்பதன் பொருள்.



கேள்வி: நான் மூன்று பிளாஷ் டிரைவ்களைப் பயன்படுத்துகிறேன். ஹார்ட் டிஸ்க்கை விரைவாக இயங்க வைக்க அதனை டிபிராக் செய்கிறோம். பிளாஷ் டிரைவினை டிபிராக் செய்வது எப்படி? விளக்கவும்.

–கே.எஸ். அருண் குமார், சென்னை

பதில்: சுருக்கமாக உங்களுக்குப் பதில் சொல்வது என்றால் பிளாஷ் டிரைவினை டிபிராக் செய்யக் கூடாது. என்ன ஆச்சரியமாக உள்ளதா? சற்று விளக்குமுன் ஒரு ஹார்ட் டிரைவ் எப்படி செயல்படுகிறது என்று சுருக்கமாகப் பார்க்கலாம். ஹார்ட் டிரைவில் டேட்டாவினை ஒரு பைல் வடிவத்தில் பதியும் போது அவை சிறு சிறு துண்டுகளாகப் பதியப்படுகின்றன. பெரும்பாலும் 512 பைட்களாகப் பதியப்படுகின்றன. இந்த துண்டுகள் எல்லாம் ஒரே சீராக வரிசையாக இருக்காது. பல இடங்களில் சிதறலாக அமையும். அதனால்தான் டிபிராக் மூலம் கூடுமானவரை சேர்த்து வரிசையாக அமைக்கிறோம். அதனால் ஹார்ட் டிஸ்க்கிலிருந்து டேட்டா படிப்பது எளிதாகிறது. ஆனால் பிளாஷ் டிரைவில் ரீட்/ரைட் ஹெட் என்று சொல்லப்படும் எழுதும் படிக்கும் ஹெட் இல்லை. எனவே இதில் பைல்களைப் படித்து அறிவது சிரமமான வேலையாக இருக்காது. டிபிராக் செய்வதால் எந்த திறனும் கூடுதலாகப் போவது இல்லை. மேலும் பிளாஷ் டிரைவ்கள் நீங்கள் அதிகம் பயன்படுத்தினால் விரைவில் அதன் தன்மையை இழக்கும். கெட்டுப் போகும். எனவே டிபிராக் செய்தால் அதன் வாழ்நாள் விரைவில் முடிவுக்கு வரும். எனவே டிபிராக் செய்திட வேண்டாம்.

பயர்பாக்ஸ்

உரசிப் பார்த்த ஆட் ஆன் தொகுப்புகள்

மொஸில்லா பயர்பாக்ஸ் தொகுப்பின் சிறப்பம்சம் அதன் பாதுகாப்பும், திடமாக அது இயங்கும் தன்மையுமே. அடுத்த படியாக எந்த திசையில் வேண்டுமானாலும் அதனை விரித்து அதன் செயல்பாடுகளைப் பெருக்கலாம் என்பதே. இது ஒரு ஓப்பன் சோர்ஸ் முறையில் எழுதப்பட்ட பிரவுசர் என்பதால் இது சாத்தியமாகிறது. இதனாலேயே பல நூறு டெவலப்பர்கள் பயர்பாக்ஸ் பிரவுசர் தொகுப்புடன் இணைந்து இயங்கும் வகையில் பல ஆட் ஆன் தொகுப்புகளை வழங்கியுள்ளனர். இணையத்தில் இவை இலவசமாகக் கிடைக்கின்றன. எண்ணிக்கை அதிகம் இருந்தாலும் இவை வழங்கும் பயன் அடிப்படையில் இவற்றைப் பார்க்க வேண்டும். இந்த ஆட் ஆன் தொகுப்புகளின் பயன் அடிப்படையில் சில நல்ல தொகுப்புகளைத் தேடிப் பார்த்து பயன்படுத்திப் பார்த்து இங்கே தருகிறோம்.

பயர்பாக்ஸ் தொகுப்பிற்கு ஒரு ஆட் ஆன் தொகுப்பினை இணைப்பது மிகவும் எளிது. பிரவுசரில் Tools, Addons தேர்ந்தெடுத்து பின் Get Addons என்று தேர்ந்தெடுத்து பின் நம் தேவைக்கேற்ப ஒரு சில சொற்களை டைப் செய்தால் ஆட் ஆன் தொகுப்புகள் தேர்ந்தெடுக்கப்பட்டு கிடைக்கும். நாம் டைப் செய்த சொற்களுக்கு ஏற்றபடி Addons Dialogue கில் புரோகிராம்கள் பட்டியலிடப்படும். இதில் பயர்பாக்ஸ் தொகுப்பிற்கான ஆட் ஆன் தொகுப்புகள் அனைத்தையும் பார்வையிட எண்ணினால் அந்த தளத்திற்கும் செல்லலாம். அதன் முகவரி https://addons.mozilla.org.

இந்த தளத்தில் நமக்குத் தேவையானதைத் தேர்ந்தெடுத்து Add on to Firefox என்பதில் கிளிக் செய்திட வேண்டும். இது இன்ஸ்டால் செய்யப்பட்டவுடன் மீண்டும் பிரவுசரை புதிதாய் இயக்கத் தொடங்கினால் இணைத்துக் கொள்ளப்பட்ட ஆட் ஆன் தொகுப்பு இயங்கத் தொடங்கும்.

ஏதேனும் ஆட் ஆன் தொகுப்பின் இயக்கம் நீக்கப்பட வேண்டும் என எண்ணினால் அதே மெனுவிற்குச் சென்று Options கிளிக் செய்து Disable அல்லது Uninstall கிளிக் செய்திட வேண்டும். இனி நாம் தேர்ந்தெடுத்த ஆட் ஆன் தொகுப்புகளுக்கு வருவோம்.

1. இணையத் தொடர்பு அறுந்து போதல்: நாம் இணையத்திலிருந்து ஏதேனும் ஒரு புரோகிராமினை டவுண்லோட் செய்திடும் போதோ அல்லது ஒன்றைப் பெற முயற்சிக்கும்போதோ இணையத் தொடர்பு அறுந்து 404 என்ற பிழைச் செய்தி கிடைத்தால் நமக்கு எரிச்சலாகத்தானே இருக்கும். இந்த அதிர்ச்சி எது



ஆட் ஆன் தொகுப்பு – பழசும் புதுசும்

பயர்பாக்ஸ் தொகுப்பு தொடர்ந்து மேம்படுத்தப் பட்டுக் கொண்டே இருக்கிறது. அதனால் அதற்கான ஆட் ஆன் புரோகிராம்களும் மேம் படுத்தப்படுகின்றன. ஒரு சில அப்படியே முதலில் தரப்பட்ட நிலையில் உள்ளன. இதனால் ஏதேனும் ஒரு ஆட் ஆன் புரோகிராம் தற்போதைய அண்மைக் காலத்திய பிரவுசர் பதிப்பான பயர்பாக்ஸ் பதிப்பு 3 உடன் இணைந்து செயலாற்றுவதில்லை.

எனவே நாம் விரும்பும் ஆட் ஆன் புரோகிராம் நம்முடைய பிரவுசர் பதிப்புடன் இணைந்து செயல்படுமா என்று முதலில் பார்த்துக் கொள்ள வேண்டும். இதனை அறிய முதலில் https://addons.mozilla.org **சென்று உங்களுடைய பயர் பாக்ஸ் தொகுப்புடன் இணைந்து செல்லும் ஆட் ஆன் தொகுப்புகளைப் பார்க்கவும். இந்த தளத்தின் முகப்பு பக்கத் தில் உள்ள** ‘Add to Firefox’ **பட்டனை அழுத்தினால் ஆட் ஆன் புரோகிராம்கள் பட்டியலிடப்படும்.**

இவற்றில் உங்களுடைய தொகுப்போடு இணைந்து செயலாற்ற முடியாத புரோகிராம்கள் கிரே கலரில் இருக்கும். அத்துடன் ‘This addon is for older versions of Firefox’ **என அறிவிப்பு ஒன்று அதன் அருகே காட்டப்படும். மற்றவை நன்றாகக் காட்சிக்குத் தெரியும்.**

வும் நம்மை அடையாமல் இணையத்தில் புதுவகையான உதவியை வழங்குகிறது www.tinyurl.com/ypthcu என்ற தளத்தில் உள்ள Resurrect Pages 2.3 என்ற புரோகிராம். இது நாம் விரும்பும் தளத்தில் உள்ளது ஏற்கனவே பிரபலமான தளங்களின் (Google, Coral CDN, Yahoo) மெமரியில் ஏற்றப்பட்டுள்ளதா என்று பார்த்து அதிலிருந்து கிடைக்க வழி செய்கிறது. சில வேளைகளில் நாம் விரும்பும் புரோகிராமின் பெயர் அல்லது செயல் குறித்து டைப் செய்வதில் தவறு ஏற்பட்டாலும் இந்த தளம் இல்லை என்ற பிழைச் செய்தி கிடைக்கும். இதனைச் செப்பனிட்டுச் சொல்ல URL Fixer என்ற புரோகிராம் www.tinyurl.com/35v6m9 என்ற முகவரியில் உள்ள தளத்தில் கிடைக்கிறது.

2. தலைவலி தரும் விளம்பரங்கள்: எப்படி தளங்கள் இல்லை என்ற 404 பிழைச் செய்தி நமக்கு எரிச்சலைத் தருகிறதோ அதே போலத்தான் இணையத்தில் பிரவுஸ் செய்கையில் குறுக்கிடும் விளம்பரங்கள். நாம் ஆர்வத்துடன் தகவல்களைப் படித்துக் கொண்டிருக்கையில் இந்த விளம்பரங்கள் குறுக்கே வந்து நம் ஆர்வத்திற்கு தடை விதிக்கின்றன. இப்படிப்பட்ட விளம்பரங்கள் குறுக்கிடாமல் இருக்க Adblock Plus என்ற ஆட் ஆன் புரோகிராமினை http://adblockplus.org/en. இது தானாக இயங்கி எந்தவிதமான விளம்பரங்களும் குறுக்கிடாமல் பார்த்துக் கொள்கிறது. எது விளம்பரம் எது உண்மையான தகவல் தரும் குறுக்கீடு என்பது இந்த புரோகிராமிற்கு முழுமையாகத் தெரியாது. எனவே இந்த புரோகிராமின் செயல்பாட்டிலேயே தடுக்கப்பட்ட விளம்பரங்களப் பார்க்க அனுமதிக்கவும் வழி தரப்பட்டுள்ளது.

விளம்பரங்களைத் தடுக்க பல நூறு ஆட் ஆன் புரோகிராம்கள் வந்த போதும் Adblock Plus தான் மிகச் சிறப்பான ஒன்றாகும். அதனால் தான் ஒரு சில வெப் மாஸ்டர்கள் பயர்பாக்ஸ் பயன்படுத்துபவர்களைத் தடுத்து திசை திருப்பி விடுகின்றனர். ஏனென்றால் அவர்களுக்கு விளம்பர வருமானம் போய்விடுகிறதே.

3. புக்மார்க் மாற்றம்: அடிக்கடி கம்ப்யூட்டரை மாற்றுபவர்களும் விண்டோஸ் தொகுப்பினை ரீ இன்ஸ்டால் செய்பவர்களும் சந்திக்கும் பிரச்சினை புக்மார்க்ஸ் பட்டியலாகும். ஒன்றுக்கொன்று பிரவுசர்களிடையே இந்த புக் மார்க்குகளை மாற்றிக் கொள்வதும் ஒரு சிக்கலான செயலாகும். இந்த பிரச்சினைக்கு Step forward Gmarks என்ற ஆட் ஆன் புரோகிராம் (www.tinyurl.com/32zzh8) உதவிடுகிறது. இது பயர்பாக்ஸ் புரோகிரமினை கூகுள் புக் மார்க் லிஸ்ட்டுடன் இணைக்கிறது. இணைத்து Gmarks Menu, Sidebar மற்றும் Toolbar ஆகிய டூல்ஸ்களைத் தருகிறது. இவற்றின் மூலம் உங்களுடைய புக்

மார்க்ஸ் எப்போதும் இயங்கும் வண்ணம் இணைக்கப்படுகிறது.

4. பாதுகாப்பான பிரவுசிங்: இன்றைய இன்டர்நெட் பிரவுசிங் செயல்பாட்டில் எங்கு எந்த யு.ஆர்.எல். மோசமான தளத்தைக் காட்டும் என்பதனைச் சொல்ல முடிவதில்லை. நாம் எண்ணிச் செல்லும் தளத்திற்குப் பதிலாக சில வேளைகளில் மோசமான தகவல்கள் இருக்கும் தளத்திற்கு நாம் எடுத்துச் செல்லப்படுகிறோம். இதனை எப்படி தடுப்பது? McAfee's Site Advisor என்னும் ஆட் ஆன் புரோகிராம் நாம் தளங்களைத் தேடிப் பட்டியலைப் பார்க்கும் போது அவை குறித்த தகவலையும் இணைக்கிறது. இதனால் நாம் அதன் மீது கிளிக்செய்து தொடர்ந்து பார்ப்பது தடுக்கப்படுகிறது.

5. ஸ்பெல்லிங் தவறுகள் ஏன்? இன்டர்நெட் பிரவுசிங் செய்கையில் பல தளங்களில் படிவங் களை நிரப்ப வேண்டியுள்ளது. இதில் தவறான ஸ்பெல்லிங் தந்துவிட்டால் அதனைப் படிப்பவர்கள் நம்மைப் பற்றித் தவறாக எண்ண வாய்ப்பு அமைந்துவிடுகிறது.

பிரவுசரிலும் ஒரு டிக்ஷனரியை இன்ஸ்டால் செய்து அது நாம் நிரப்பும் சொற்களின் எழுத்துப் பிழையைச் சுட்டிக் காட்டுவதாக இருந்தால் நன்றாக இருக்கும் அல்லவா? Firefox Dictionaries and Language பெற www.tinyurl.com/2x4d98 என்ற தளம் சென்று உங்களுக்கு வேண்டிய மொழி டிக்ஷனரியை தேர்ந்தெடுத்து இன்ஸ்டால் செய்திடவும். பின் எப்போது நீங்கள் ஆங்கிலச் சொற்களை டைப் செய்திட்டாலும் அது சரியாக உள்ளதா என இந்த டிக்ஷனரியின் மூலம் சோதனை செய்யப்படும்.

6. டெக்ஸ்ட் மட்டும் காப்பி செய்திட: இணைய தளம் ஒன்றிலிருந்து டெக்ஸ்ட்டை காப்பி செய்திடுகையில் அதன் உடன் உள்ள இணைய தள பார்மட்டிங் மற்றும் பிற சிறு சிறு ஐகான்கள் ஆகியவையும் கிராபிக்ஸ் படங்களும் காப்பி ஆகின்றன. இதனால் நமக்கு கிடைக்கவேண்டிய டெக்ஸ்ட் மோசமான நிலையில் காட்டப்படுகிறது. இதனைத் தவிர்த்து டெக்ஸ்ட் மட்டும் காப்பி ஆக Copy Plain Text என்ற புரோகிராமினை இன்ஸ்டால் செய்திடலாம். இது www.tinyurl.com/yrfqzd என்ற முகவரியில் உள்ள தளத்தில் கிடைக்கிறது.

கேள்வி பதில்

கேள்வி: **வேர்ட் டாகுமெண்ட்டில் குறிப்பிட்ட இடத்தில் உள்ள டெக்ஸ்ட்டை மட்டும் மறைத்து வைத்து பிறரிடம் காட்டி பின் மீண்டும் தேவைப்படும்போது காட்ட முடியுமா? அதுவரை அந்த டெக்ஸ்ட் அழியாமல் இருக்க என்ன செய்திட வேண்டும்?**

–எஸ். தேன்மொழி, பழநி

பதில்: குறிப்பிட்ட டெக்ஸ்ட்டை மறைக்கலாம். மறைக்கப்பட வேண்டிய டெக்ஸ்ட்டை முதலில் செலக்ட் செய்து கொள்ளவும். பின் Format மெனு சென்று Fonts கிளிக் செய்திடவும். கிடைக்கும் விண்டோவில் Effectsஎன்ற பகுதியில் இறுதியாக உள்ள Hidden என்னும் பாக்ஸின் முன் டிக் அடையாளம் ஏற்படுத்தவும். பின் மீண்டும் இந்த டெக்ஸ்ட் காட்டப்பட வேண்டும் என்றால் Ctrl+A கொடுத்து மீண்டும் அதே முறையில் பாண்ட் விண்டோவிற்குச் சென்று டிக் அடையாளத்தை எடுத்துவிடவும். இப்போது மறைக்கப்பட்ட டெக்ஸ்ட் மீண்டும் காட்டப்படும். இது குறித்து இதே மலரில் ஒரு கட்டுரையில் குறிப்பிடப் பட்டுள்ளது.

நோக்கியா 5800 எக்ஸ்பிரஸ் மியூசிக்

வெகுநாட்களாக ஆவலுடன் எதிர்பார்த்த நோக்கியாவின் டச் ஸ்கிரீன் மொபைல் 5800 எக்ஸ்பிரஸ் மியூசிக் அண்மையில் விற்பனைக்கு வந்தது. நோக்கியாவின் லேட்டஸ்ட் மல்ட்டிமீடியா அதிசயம் என இதனைக் கூறலாம்.

15.5. மிமீ தடிமனில் இது எதிர்பார்த்தகைக் காட்டிலும் சற்று கூடுதல் தடிமன் கொண்டதாக இருப்பினும் அழகாக உள்ளது. 320 x 640 பிக்ஸெல் திறனுடன் 3.2 அங்குல வண்ணத் திரை அழகாக உள்ளது. இதனால் நல்ல சூரிய வெளிச்சத்திலும் திரையில் இருப்பவை நன்றாகத் தெரிகின்றன. ஒவ் வொரு செயல்பாட் டிற்கும் கீகள் தரப்பட்டு அவை சிறப்பாக இயங்குகின்றன. யு.எஸ். பி. போர்ட், ஆடியோ மற்றும் டிவி அவுட் ஆகியவைக்கான ஜாக்கெட்களும் எளிதில் இயக்கும் வண்ணம் இடம் விட்டு அமைக்கப் பட்டிருக்கின்றன.

இரண்டு மறைத்து வைக்கப்பட்டுள்ள ஸ்லாட்டுகள் சிம் கார்டினையும் 8 ஜிபி மைக்ரோ எஸ்.டி. கார்டினையும் உள் வாங்கிக் கொள்கின்றன. கேமரா கீ, டிஸ்பிளேக்கான லாக், வால்யூம் மற்றும் ஸூம் கீ ஆகியவைகள் தனித்துத் தரப் பட்டுள்ளன. டூயல் பிளாஷ் கொண்டு 3.2 எம்பி கேமரா இயங்குகிறது. டச் ஸ்க்ரீன் செயல்பாட்டுடன் சிம்பியன் இயக்கத் தொகுப்பு சிறப்பாக இந்த போனில் இயங்குகிறது. மெனு மிகப் பெரியதாக உள்ளது. எனவே திரையில் விரல்களாலேயே தேவையான பிரிவை இயக்கலாம்.

குவெர்ட்டி கீ போர்டு எளிதாக இயங் குகிறது. இதனுடன் ஆன்லைன் குவெர்ட்டி கீ போர்டு மற்றும் மினி குவெர்ட்டி கீ போர்டும் கிடைக்கிறது. ஹேன்ட் ரைட்டிங் ரிகக்னிஷன் இன் னொரு வழியில் டேட்டா இன்புட் வழி தருகிறது. உள்ளாக இணைந்த ஸ்டீரியோ ஸ்பீக்கர்கள் சற்று உரக்கவே ஒலிக்கின்றன. வீடியோ காட்சிகள் 3.2 அங்குலத் திரையில் பளிச் என நன்றாகக் காட்சி அளிக்கின்றன. இதனுடன் தரப்படும் 8 ஜிபி மைக் ரோ எஸ்.டி .கார்டில் வீடியோ, ஆங் கில மற்றும் இந்தி பாடல்கள் பதிந்து தரப்படுகின்றன. ரூ. 20 ஆயிரத்திற்குக் குறைவாக விலையிடப்படும் இந்த போன் விரைவில் உயர் ரக மொபைலை எதிர்பார்ப் போரின் பிரிய போனாக மாறும்.

L

ஆர்.ஐ.எம்.
இணைந்து பி
போனை இந்
யுள்ளன. பல
மொபைல் இது
போன் அறிமு
யும் காட்டினா
வந்தன. அவை

- ★ 3.25 அ
ரெசல்யூ
- ★ 1 ஜிபி உ
எஸ்.டி.
டன் 1 ஜி
- ★ 3G (HSD

வரும் மார்ச்
வனம் தன்
சர்வீஸ் அ
கூடுதல் சே
திட்டமிடுகிறது
கேமிங், மி
போன்ற பி
வழங்க இந்தி
ஒப்பந்தம் செ
றது.

இந்த சேவை
பும் வாடிக்
செலுத்த இ
லேயே ஒரு
அமைக்கப்ப
போது இந்த
இன்டர்நேஷ
கிரெடிட் கா
டுத்தித்தான்
இந்திய கிரி

பிளாக் பெரி ஸ்டார்ம் வந்துவிட்டது

. மற்றும் வோடபோன் நிறுவனங்கள் பிளாக்பெரி ஸ்டார்ம் 9500 மொபைல் தியாவில் விற்பனைக்கு அறிமுகப்படுத்தி நாட்களாக எதிர்பார்க்கப்பட்ட டச் ஸ்கிரீன் து. மும்பையில் நடந்த ஒரு நிகழ்ச்சியில் இந்த கப்படுத்தப்பட்ட போது அதனை இயக்கி ர்கள். அப்போது அதன் அம்சங்கள் தெரிய வ

ங்குல அகல வண்ணத்திரை 360 x 480 சன் கொண்டதாக அமைக்கப்பட்டுள்ளது.

உள் நினைவகம் கொண்டுள்ளது. மைக்ரோ கார்ட் போர்ட் உள்ளது. மொபைல் போனு ஜிபி கார்ட் தரப்படுகிறது.

DPA), GPRS/EDGE, Bluetooth 2.0 (A2DP) ஆகிய தொழில் நுட்பங்கள் இணைக்கப்பட்டுள் ளன. நெட்வொர்க் கனெக்டிவிடி இதனால் சிறப்பாக அமைக்கப்படுகிறது.

- ★ ஜி.பி.எஸ். ஜியோ டேக்கிங், பிளாக் பெரி மேப்ஸ், கூகுள் மேப்ஸ் தரப்படுகின்றன.
- ★ ஜாவா சப்போர்ட் தரப்பட்டுள்ளது.
- ★ 3 மெகா பிக்ஸெல் கேமரா

ஏற்கனவே வெளியான போல்ட் மாடலை அடுத்து இது வந்துள்ளது. இந்தியாவில் விரைவில் வர இருக்கும் 3ஜி ஸ்பெக்ட்ரம் அலைவரிசையில் இயங்கும் சிறந்த போனாக ஸ்டார்ம் இருக்கும் என்று கருதப்படுகிறது. இதன் விலை ரூ.27,990

இதன் முழு திறன் குறித்து அடுத்து வரும் இதழ்களில் காணலாம்.

நோக்கியாவின் இந்திய மொபைல் சர்வீஸ்

ச் முதல் நோக்கியா நிறு இந்திய மொபைல் மைப்பைத் தொடங்கி வையை வழங்கிடத் து.

யூசிக் மற்றும் மேப்ஸ் பிரிவுகளில் சேவை ய நிறுவனங்களுடன் மற் கொண்டு வருகி

வையைப் பெற விரும் கையாளர்கள் பணம் இந்திய கட்டமைப்பி பேமென்ட் கேட் வே இருக்கிறது. தற் சேவையினைப் பெற னல் நிறுவனங்களின் ர்டுகளைப் பயன்ப வாங்க முடியும்.

க்கெட் மற்றும் சினிமா அடிப்படையில் கேம்ஸ் வடிவ மைக்கப்பட்டு வழங்கப்படும். அதே போல நோக்கியா மியூசிக் சர் வீசஸ் என்ற பெயரில் அமைக்கப்ப டும் மியூசிக் விற்பனை மையத்தில் இந்திய மியூசிக் பாடல்கள் கிடைக்கும்.

பத்து லட்சம் பாடல்கள் வரை இங்கு கிடைக்கும் வகையில் பல மியூசிக் நிறுவனங்களுடன் ஒப்பந் தங்கள் மேற்கொள்ளப்பட்டு வரு கின்றன. விலையும் இங்கு நிலவும் வர்த்தக அமைப்பிற்கேற்ப நிர்ண யம் செய்யப்படும்.

நோக்கியா வழங்க இருக்கும் மொபைல் கேம்ஸ், மியூசிக் மற்றும் மேப்ஸ் அனைத்தும் ஓவிஐ என்ற பெயரிலேயே வழங்கப்படும். அடுத்து நோக்கியா அறிமுகப்படுத்த இருக்கும் என் 76 மொபைல் போன் வெளியீட்டின் போது இந்த நோக்கியா சர்வீஸ் தொடங்கப்பட இருக்கிறது.

அடுத்து அறிமுகப்படுத்த இருக் கும் மொபைல் போன் கள் அனைத் துடனும் இந்த ஓவிஐ சர்வீஸ் வழங்கப்பட உள்ளது.

நவீன தொழில் நுட்பத்தில் அமைந்த நோக்கியா எக்ஸ்பிரஸ் மியூசிக் 5800 இந்த மாதத் தொடக்கத்தில் வெளியான போது 4,000 போன்களுக்கு முன்னதா கவே ஆர்டர் பெற்றிருந்தது இங்கு குறிப்பிடத்தக்கது.

சாம்சங் வழங்கும் மிக மெல்லிய டிஜிட்டல் கேமரா

Samsung ST50 என்ற பெயரில் 14மிமீ தடிமன் அளவில் ஒரு ஸ்லிம்மான டிஜிட்டல் கேமராவினை சாம்சங் நிறுவனம் அறிமுகப்படுத்தியுள்ளது. அண்மையில் நடந்த போட்டோ பேர் 2009ல் இது வெளிவந்தது. கண்ணாடிப் பளபளப்பில் இதன் தோற்றம் அமைந்துள்ளது. உள்ளங்கையில் வைத்து எடுத்துச் செல்லலாம். எனவே பாக்கெட்டிலும் இதனைப் போட்டுக் கொள்ளலாம். என்னதான் சிறியதாக இருந்தாலும் இதனைப் பயன்படுத்தி போட்டோக்கள் மற்றும் வீடியோ எடுப்பது சற்று சிரமமாகத்தான் உள்ளது. மேலும் ஸ்டீல் பாடியாக இருப்பதால் வழுகும் நிலையும் ஏற்படும். இருப்பினும் அளவில் சிறிய இந்த கேமரா ஒரு அழகுதான்.

இந்த கேமராவில் கிடைக்கின்ற மெனு எல்லா சாம்சங் மெனுவினைப் போலவே உள்ளது. இதில் 12.2 மெகா பிக்ஸெல் திறன் கொண்ட சென்சார் உள்ளது. 2.7 அங்குல டி.எப்.டி. எல்சிடி திரை பளிச் சென படங்களுக்கான இடத்தை மற்றும் உருவத்தைக் காட்டுகிறது. புதிதாக சாம்சங் இதில் “Smart Scene” என்ற வசதியைத் தருகிறது. இதன் மூலம் 11 வகையான சீன் செட்டிங்ஸ் அமைத்துக் கொள்ளலாம். இதனைப் பயன்படுத்தி கேமராவில் எடுத்து சேமித்து வைத்துள்ள படங்களைத் தேடியும் கண்டு பிடிக்கலாம்.

மேலும் இதில் பேஸ் டிடக்ஷன் தொழில் நுட்பம் இருப்பதால் நாம் போட்டோ எடுக்கும் போட்டோ எடுக்கும் நபரின் முகம் அறிந்து அதற்கேற்ற வகையில் கேமரா ஆட்டோ போகஸ் செய்து கொள்கிறது. அதே போல கண் இமைத்தல் மற்றும் சிரித்தல் ஆகியவற்றிற்கேற்பவும் இது அட்ஜஸ்ட் செய்து கொண்டு போட்டோக்களை எடுக்கிறது. இதில் உள்ள பியூட்டி ஷாட் (Beauty Shot) மோட் முக கலரை அட்ஜஸ்ட் செய்து பளிச் என்ற போட்டோக்களை எடுக்கிறது. இதில் உள்ள நேவிகேஷன் புரோகிராம் நாம் எடுத்த படங் களை நாள், கலர், தீம் வகையாகப் பிரித்து வைக்கிறது. இதில் ஒரு ரீசைக்கிள் பின்னும் உள்ளது. வேண்டாத படங்களை பெர்சனல் கம்ப்யூட்டரில் போட்டு வைப்பதைப் போல் போட்டு வைக்கலாம். இது இந்தியாவிற்கு விற்பனைக்கு விரைவில் வரும். இதன் விலை ரூ. 16,000 முதல் ரூ.18,000 வரை இருக்கலாம்.

பெருகி வரும்
மொபைல் போன் டவர்கள்

மொபைல் போன் பயன்பாட்டில் உலக அளவில் இரண்டாவது இடத்தைப் பெற்றிருக்கும் இந்தியாவில் இதற்கான மொபைல் டவர்களின் எண்ணிக்கையும் நாளுக்கு நாள் உயர்ந்து வருகிறது. 2009 ஆம் ஆண்டில் இதன் எண்ணிக்கை 2 லட்சத்து 50 ஆயிரமாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இவ்வகையில் தேவைக்கும் அதிகமாகவே டவர்களின் எண்ணிக்கை உயர்ந்து வருகிறது. மொபைல் போன் ஆப்பரேட்டர் நிறுவனங்கள் மட்டுமின்றி மொபைல் டவர்களை அமைத்து வாடகைக்கு விடும் நிறுவனங்களும் தொடர்ந்து இவற்றை அமைத்து வருகின்றன. ஆனால் ட்ராய் அமைப்பு 2011 ஆம் ஆண்டில் இந்தியாவில் 3 லட்சம் டவர்கள் தேவைப்படும் என அறிவித்துள்ளது.

அடுத்து வர இருக்கும் 3ஜி சர்வீசஸ் அமலாக்கத்தை ஒட்டி இன்னும் பல டவர்கள் தேவைப்படும் என்ற எதிர்பார்ப்பில் டவர் கட்டமைப்பு பணியில் ஈடுபடும் நிறுவனங்கள் புதிய டவர்களை அமைக்கும் பணியில் ஈடுபட்டு வருகின்றன. மொபைல் போன் சர்வீஸ் வழங்கும் நிறுவனங்களும் தங்களுக்குள் இணைந்து டவர்களை அமைக்கும் பிரிவு நிறுவனத்தைத் தொடங்கி அமைத்து வருவதும் இங்கு குறிப்பிடத்தக்கது. பார்தி ஏர்டெல், வோடபோன் மற்றும் வோடபோன் எஸ்ஸார் ஆகிய நிறுவனங்கள் இண்டஸ் டவர் என்னும் பிரிவை நடத்தி வருகின்றன. இண்டஸ் டவர்ஸ் 90 ஆயிரம் டவர்களைக் கொண்டுள்ளது. இவை தவிர இந்த நிறுவனங்கள் தனித்தனியாகவும் டவர்களைக் கொண்டுள்ளன. டவர்களை அமைத்து மொபைல் சர்வீஸ் நிறுவனங்களுக்கு வாடகைக்கு இடம் வழங்கும் நிறுவனங்களுக்கிடையே போட்டி ஏற்பட்டு வருவதால் டவர் வாடகையும் கணிசமாகக் குறையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

நோக்கியா என்79

நல்ல பேட்டரி, எளிதாக இயங்கும் இன்டர்பேஸ், சிறந்த கேமரா, தெளிவான ஆடியோ பிளேயர், எப்.எம். ரேடியோ பிக் அப், பலவகையான மீடியா ஆப்ஷன்ஸ் என வழக்கம்போல நோக்கியாவின் மல்ட்டி மீடியா போன்களைப் போல என்79 உள்ளது. முதலில் நம்மைக் கவர்வது அதன் மேலாக உள்ள கோடுகளும் வளைவுகளுமே. இவை இந்த போனுக்கு ஒரு சிறப்பான தோற்றத்தை அளிக்கின்றன. 240 x 320 பிக்ஸெல்களுடன் 2.4 அங்குல அகலத்திரை 16 மில்லியன் வண்ணங்களுடன் பளிச் என்று இருக்கிறது.

கீ பேட் மிகவும் பெரிதாக அமைக்கப்பட்டிருப்பதால் உங்கள் விரல் எத்தகையது என்றாலும் பேடை எளிதாக இயக்கலாம். மீடியா மெனுவினை இயக்க தனி பட்டன் தரப்பட்டுள்ளது. கீ–லாக் ஸ்லைடர் , பவர் பட்டன் மற்றும் 3.5 மிமீ இயர் போன் ஜாக்கெட், தரப்பட்டுள்ளது. மைக்ரோ கார்ட் ஸ்லாட் மற்றும் யு.எஸ்.பி.போர்ட் ஆகிய இரண்டையும் ஒரு பிளாப் மூடி வைத்துள்ளது. ஒரு மெல்லிய லென்ஸ் கவருடன் 5 எம்பி திறன் கொண்ட கேமரா தரப்பட்டுள்ளது.

குறிப்பாக டிவி அவுட் வசதியும் இதில் உள்ளது. மற்றபடி ஸ்டீரியோ எப்.எம். ரேடியோ, பலவகை பார்மட் பைல்களைக் கையாளும் மியூசிக் பிளேயர், எப்.எம். ரேடியோ ட்ரான்ஸ்மீட்டர் ஆகியவை வழக்கம்போல சிறப்பாக இயங்குகின்றன. இமேஜ் மற்றும் வீடியோ எடிட் செய்திட ஆன் போர்ட் எடிட்டர் இதில் தரப்பட்டுள்ளது.

நெட்வொர்க் கனெக்ஷன் வசதிகளைப் பொறுத்தவரை இந்த கேமரா பலவகை இணைப்பு வசதி கொண்டுள்ளது. WiFi, EDGE/GPRS WiFi, EDGE/GPRS மற்றும் 3G ஆகியவை இதில் உள்ளன. இவற்றுடன் Stereo Bluetooth (A2DP) இணைப்பும் உள்ளது. மற்றும் எஸ்–60 இயக்கம் சார்ந்து கிடைக்கும் அனைத்தும் (பி.டி.எப். ரீடர், குயிக் ஆபிஸ், ஆக்டிவ் நோட்ஸ், காலண்டர், ஸிப் அப்ளிகேஷன் ஆகியவற்றுடன் நோக்கியாவின் மெசேஜ் ரீடர் என்னும் டெக்ஸ்ட் டு ஸ்பீச் வசதியும் தரப்படுகிறது. போன் மற்றும் டேட்டா பாதுகாக்க வேவ் செக்யூர் தரப்படுகிறது. இந்தி ஆங்கிலம் இணைந்த எஸ்.எம்.எஸ். வசதி உள்ளது. நோக்கியா மேப்ஸ் 2 தரப்பட்டுள்ளது. முதல் 3 மாதங்களுக்கு இது இலவசம். ஜி.பி.எஸ். ஆன்டென்னாவுடன் ஜி.பி.எஸ். வசதி கிடைக்கிறது.

இந்த மொபைலின் சிறந்த அம்சமாக இதன் பேட்டரியைச் சொல்லலாம். ஒரு முறை சார்ஜ் செய்து மூன்று நாட்கள் வரை பயன்படுத்த முடிந்தது. 15மிமீ தடிமனுடன் 97கிராம் எடையில் இந்த போன் கிடைக்கிறது. இதன் குறியீட்டு விலை ரூ.19,000.

கேள்வி பதில்

கேள்வி: ***என்னுடைய இமெயில் முகவரிக்கு ஆப்பிரிக்க நாடு ஒன்றின் வங்கியில் நிறைய பணத்தை விட்டுவிட்டு ஒருவர் மரணமடைந்துவிட்டதாகவும் அதனை என் அக்கவுண்ட்டில் போட்டு எடுத்துத் தந்தால் 10 சத விகிதப் பணம் தருவதாகவும் கடிதம் வருகிறது. இது போல வேறு வேறு பெயர்களில் வருகிறது. இதனால் என்ன கெடுதல் வரும்? இவை மூலம் வைரஸ் பரவுகிறதா?***

–எஸ் .சுதர்சனம், நாகமலை

பதில்: இதெல்லாம் இமெயில் வழியே வரும் ஏமாற்று வேலை கள். உழைப்பில்லாமல் எந்த பணத்தையும் ஏற்றுக் கொள்ள மாட்டேன் என்ற நல்ல வழியில் சிந்தனையைச் செலுத்தி இது போன்ற கடிதங்களை ஒதுக்கித் தள்ளுங்கள். முதலில் உங்களை பதில் அனுப்பச் சொல்வார்கள். பின் போன் எண் கேட்பார்கள். அடுத்து பேங்க் அக்கவுண்ட், கிரெடிட் கார்டு எண் அதன் பாஸ்வேர்ட் என அனைத்து தகவல்களையும் கேட்டு உங்களை அறியாமலேயே உங்கள் வங்கிப் பணத்தை எடுத்து விடுவார்கள். உங்கள் பேங்க் பேலன்ஸில் 10 சதவிகிதம் கூட மிஞ்சாது. இதே போல உங்களுக்கு லாட்டரி விழுந்துள்ளது. மைக்ரோசாப்ட் தேர்ந்தெடுத்த அதிர்ஷ்டசாலிகளில் நீங்களும் ஒருவர். பணம் எப்படி அனுப்ப? என்றெல்லாம் கடிதம் வந்தால் முழுவதும் படித்துக் கூடப் பார்க்க வேண்டாம்.

கேள்வி: ***என் நண்பர் எக்ஸெல் ஒர்க் ஷீட்டில் பார்முலாவின் தொடக்கமாக = போடாமல் கூட்டல் அடையாளத்தைப் போடுகிறார். இது சரியா?***

– கா. பீட்டர் ஜெயராஜ் திருமங்கலம்

பதில்: கூட்டல் கழித்தல் என எந்த அடையாளத்தையும் போடலாம். + மட்டுமல்ல – அடையாளத்தையும் போட்டு பார்முலாவினைத் தொடங்கலாம். ஆனால் எக்ஸெல் தொகுப்பு அதனை வழக்கம் போல் பார்முலாவிற்கான தொடக்கமான = போட்டு மாற்றிக் கொள்ளும்.

கேள்வி: ***முன்பு ஒருமுறை கம்ப்யூட்டர் மலர் குறிப்பில் எம்.எஸ். எக்ஸெல் தொகுப்பின் பைல் மெனுவில் ஒன்பது பைல்கள் காட்டும்படி அமைக்க வழி சொல்லியிருந்தீர்கள். அதன்படி அமைத்தேன். ஆனால் இப்போது எந்த பைலையும் காட்டவிடாமல் மாற்ற வேண்டும் என எண்ணுகிறேன். இதனை எப்படி மாற்றுவது?***

– க. விநாயக மூர்த்தி, விழுப்புரம்.

பதில்: எம்.எஸ். ஆபீஸ் தொகுப்பில் உள்ள அனைத்து புரோகிராம்களும் நான்கு பைல்களையே காட்டும். இதனைக் கூடுதலாக 9 பைல்களைக் காட்ட Tools> Options> General (Tab) Recently Used File list என்ற வழியில் சென்று எண்ணை 9 என உயர்த்தி இருப்பீர்கள். இப்போது அதே போல் சென்று Recently Used File list என்பதற்கு எதிரே உள்ள கட்டத்தில் உள்ள டிக் அடையாளத்தை எடுத்துவிடுங்கள். இனி எந்த பைலும் காட்டப்பட மாட்டாது. ஆனால் இதில் கவனம் தேவை. இது மற்ற எம்.எஸ். ஆபீஸ் புரோகிராம்களையும் பாதிக்கும்.

கேள்வி: ***மொபைல் போனில் ஜி.பி.ஆர்.எஸ். என எழுதிக் கொண்டு போகிறீர்கள். ஒரு நாளாவது அது என்ன என்று விளக்குங்களேன்.***

கே. ஸ்ரீலஷ்மி, காரைக்கால்.

பதில்: ஜி.பி.ஆர்.எஸ். (General Packet Radio Servide) ஜெனரல் பாக்கெட் ரேடியோ சர்வீஸ் என்பதன் சுருக்கமே இது. உங்கள் மொபைல் போனைப் பயன்படுத்தி இன்டர்நெட் வசதியினைப் பெற இந்த வசதி பயன்படுகிறது. உங்கள் போனையே மோடம் போல் பயன்படுத்தி அதனை ஒரு பெர்சனல் கம்ப்யூட்டருடன் இணைத்து இன்டர்நெட் பிரவுஸ் செய்திடலாம். இதன் மூலம் இணையத் தேடுதலை மேற்கொள்கையில் 115 கே.பி.பி.எஸ் வேகம் கிடைக்கும். உங்கள் மொபைல் போனில் ஜி.பி.ஆர்.எஸ். வசதி இருந்து அதனைப் பயன்படுத்த வேண்டுமென்றால் நீங்கள் உங்களுக்கு மொபைல் போன் வசதியைத் தரும் நிறுவனத்தைத் தொடர்பு கொண்டு இந்த வசதியைப் பெற வேண்டும். எந்த அளவிற்கு

தகவலை இறக்குகிறீர்களோ அந்த அளவிற்கு கட்டணம் வசூலிக்கும் நிறுவனங்கள் உண்டு. அல்லது மாதம் ஒரு குறிப்பிட்ட தொகையைச் செலுத்திப் பின் எவ்வளவு நேரம் வேண்டுமானாலும் மொபைல் போன் மூலம் இன்டர்நெட் பிரவுசிங் செய்திடும் வகையிலும் வசதிகளை மொபைல் நிறுவனங்கள் தருகின்றன. கவலையே படாதீர்கள். 3ஜி வசதி வந்தவுடன் எல்லாமே அனுபவத்தில் வந்துவிடும்.

மேக் டிப்ஸ் பக்கம்

1

டெக்ஸ்ட் செலக்ஷன் கலர் மாற்ற

மேக் கம்ப்யூட்டர் ஒன்றில் டெக்ஸ்ட் செலக்ட் செய்திடுகையில் அது மாறா நிலையில் உள்ள டிபால்ட் கலரில் தேர்ந்தெடுக்கப்படுகிறது. ஆனால் நாம் விரும்பும் வண்ணத்தில் அதைக் கொள்வதற்கு 'System Preferences' வழி தருகிறது. இதனை எப்படி மேற்கொள்வது என்று பார்ப்போம்.

1. முதலில் 'System Preferences' ஐத் திறந்து கொள்ளுங்கள். இதற்கு Apple Menu > System Preferences வழியாகச் செல்லுங்கள். (படம் 1)
2. இதில் 'Appearance' என்பதைத் தேர்ந்தெடுக்கவும். இங்கு கிடைக்கும் கீழ் விரி மெனுவில் நீங்கள் விரும்பும் கலரைத் தேர்ந்தெடுக்கவும். (படம் 2) மேக் சிஸ்டம் டிபால்ட் கலராக 8 கலர்களை உங்களுக்கு தரும். இவை பிடிக்கவில்லை எனில் வேறு கலர்களையும் Other என்ற பிரிவில் தரும். (படம் 3)
3. இப்போது சோதித்துப் பார்க்கலாம். ஒரு கலரைக் கிளிக் செய்துவிட்டு உங்கள் மவுஸ் கர்சரால் டெக்ஸ்ட் ஒன்றில் இழுத்தால் அந்த வண்ணம் பூசப்படும்.

2



3

இமெயிலை மீண்டும் அனுப்ப

ஏதேனும் ஒரு இமெயில் செய்தியை யாருக்காவது அனுப்பியிருப்பீர்கள். அவர்களோ தங்களுக்கு அது வரவே இல்லை என்று சாதிப்பார்கள். மீண்டும் ஒரு முறை அதனை அனுப்ப வேண்டும் என நீங்கள் விரும்பலாம். இவ்வாறு அனுப்பிய மெசேஜ் மெயிலை மீண்டும் எப்படி அனுப்புவது என்பதை மேக் சிஸ்டத்தில் எப்படி செட் செய்திடலாம் என்று பார்க்கலாம்.

1. முதலில் மெயிலைத் திறந்து கொள்ளுங்கள்.
2. 'Sent' பாக்ஸில் கிளிக் செய்து நீங்கள் திரும்ப அனுப்ப விரும்பும் மெசேஜைக் காணவும். மீண்டும் அதன் மீது கிளிக் செய்து தேர்ந்தெடுக்கவும்.
3. இப்போது 'Message' மெனு செல்லவும். இதில் 'Send Again' என்பதில் கிளிக்

4

செய்திடவும்.

4. இனி மெசேஜ் பாக்ஸ் மேலே கிடைக்கும். இதன் பின் 'SEND' என்பதில் கிளிக் செய்திடவும். மெசேஜ் இப்போது மீண்டும் அனுப்பப்படும். (படம் 4)

புரோகிராம் புதிய ஓப்பனிங்

ஒவ்வொரு புரோகிராமும் ஒருவகையான பைலைத் திறக்க மாறா நிலையில் (Default) அமைக்கப்பட்டிருக்கும். எடுத்துக் காட்டாக அனைத்து Doc பைல்களும் வேர்ட் தொகுப்பால் திறக்கப்படும். சில வேளைகளில் நாம் வேறு ஏதேனும் ஒரு புரோகிராமினால் திறக்க எண்ணுவோம். இதே போல JPEG பைல் ஒன்று இருக்கும். கம்ப்யூட்டரில் அந்த வகை பைலை Adobe Photo shop புரோகிராம் கொண்டு திறக்கும் வகையில் டிபால்ட்டாக அமைக்கப் பட்டிருக்கும்.

ஆனால் இது லோட் ஆக அதிக நேரம் பிடிக்கும். எனவே உடனே அந்த பட பைலில் உள்ள படத்தை ஜஸ்ட் பார்த்திட இவ்வளவு நேரம் காத்திருக்க வேண்டுமா? என்ற எண்ணத்தில் இன்னொரு புரோகிராம் மூலம் நாம் திறந்து பார்க்க எண்ணுவோம். அது உடனே திறக்க கூடிய புரோகிராமாக இருக்கலாம். எடுத்துக் காட்டாக இந்த வகையில் Preview புரோகிராம் எனக்கு உதவும். இதற்கு மேக் கம்ப்யூட்டரில் அந்த பைலை செலக்ட் செய்து அந்த புரோகிராம் ஐகானில் போட்டு விட்டால் போதும். அந்த புரோகிராம் அதனைத் திறந்து காட்டும். ஆனால் இதனால் டிபால்ட் புரோகிராம் மாறாது. அப்போதைக்கு அந்த பைலை மட்டுமே வேறு புரோகிராம் திறக்கும். (படம் 5)

5



கேள்வி பதில்

கேள்வி: ஸிப்டு பைல் என்றுசொல்வது எது? எந்த வகை புரோகிராமில் இருந்து இது உருவாகிறது? அன்பு கூர்ந்து விளக்கவும்.

– எஸ். காமினி, விருதுநகர்

பதில்: ஸிப்டு ("zipped") பைல் என்பது ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட பைல்கள் சுருக்கப்பட்டு கிடைக்கும் பைலாகும். நீங்கள் அடிக்கடி சாப்ட்வேர் புரோகிராம்களை டவுண்லோட் செய்பவராக இருந்தால் இது போன்ற பைல்கள் பலவற்றைக் கண்டிருப்பீர்கள். இதனைக் கையாள்வது கடினமானது அல்ல. சுருக்கப்பட்ட பைலை விரிக்க ஒரு புரோகிராம் தேவைப்படும். இவை Winzip மற்றும் Stuffit போன்றவை ஆகும். Winzip புரோகிராமினை http://www.winzip.com என்ற முகவரியில் உள்ள தளத்திலிருந்து பெறலாம். இது ஒரு ஷேர்வேர் எனப்படும் பலருடனும் பகிர்ந்து கொள்ள உரிமை அளிக்கப்படும் புரோகிராம் ஆகும். உங்களிடம் விண்டோஸ் எக்ஸ்பி இருந்தால் இந்த புரோகிராமும் தேவையில்லை. விண்டோஸ் எக்ஸ்பி சிஸ்டத்திலேயே அன்ஸிப் செய்வதற்கான வசதியும் தரப்பட்டுள்ளது. ஸிப் செய்யப்பட்ட பைலின் மீது இருமுறை கிளிக் செய்தால் எக்ஸ்பி சிஸ்டம் ஒரு மெனு தரும். அதில் அன்ஸிப் செய்யப்படும் பைலை எந்த இடத்திற்கும் கொண்டு செல்லும் வசதி தரப்பட்டிருக்கும். இடது புறத்தில் என்று தரப்பட்டிருக்கும் இடத்தில் இருமுறை கிளிக் செய்தால் எப்படி பைல்கள் விரிக்கப்பட வேண்டும் மற்றும் அவை எங்கு கொண்டு செல்லப்பட வேண் டும் என்பதனை நீங்கள் முடிவு செய்திடலாம்.



டச் ஸ்கிரீன் கொண்ட பிரபலமான மொபைல்கள்

எச்.டி.சி., டச்

ஆப்பிள் ஐ போன்

சாம்சங் ஆம்னியா

ஆப்பிள் ஐ போன்

எச்.டி.சி., டச் டைமண்ட்

குவெர்ட்டி கீ போர்டு கொண்ட போன்களில் பிரபலமானவை

நோக்கியா E 71

நோக்கியா E 61i

நோக்கியா E 90 Communicator

பிளாக்பெரி பேர்ல் 8110

பிளாக்பெரி 8800

பிளாக்பெரி போல்ட் 9000

சாம்சங் i780



அசூஸ் M930

கம்ப்யூட்டர் தொழில் நுட்ப சொற்கள்



Clipboard: *(கிளிப் போர்டு)* பெர்சனல் கம்ப்யூட்டர் மெமரியின் ஒரு பகுதி. விண்டோஸ் இதனைப் பயன்படுத்தி நாம் புரோகிராம் ஒன்றில் காப்பி மற்றும் கட் செய்திடும் பகுதிகளை பதிந்து வைக்கிறது.

Driver: *(டிரைவர்)* விண்டோஸ் கம்ப்யூட்டரில் உள்ள துணை சாதனத்துடன் தொடர்பு கொள்ள இயங்கும் ஒரு புரோகிராம்.

Motherboard: *(மதர் போர்டு)* பெர்சனல் கம்ப்யூட்டர் ஒன்றில் அமைக்கப்படும் பெரிய அளவிலான சர்க்யூட் போர்டு. இதில் தான் கம்ப்யூட்டரின் ஒவ்வொரு சாதனமும் இணைக்கப்படுகிறது.

BIOS (Basic Input and Output System) *: (பயாஸ்)* அனைத்து கம்ப்யூட்டர்களிலும் அதனுடன் இணைக்கப்பட்டுள்ள அடிப்படை சாதனங்களின், ஸ்கிரீன், ஹார்ட் டிஸ்க் போன்றவை, செயல்பாடுகளைச் சோதித்து கட்டுப்படுத்தும் ஒரு புரோகிராம். ஒரு பெர்சனல் கம்ப்யூட்டர் ஸ்விட்ச் ஆன் செய்யப்படுகையில் ஆப்பரேட்

டிங் சிஸ்டத்தைப் பெற இந்த பயாஸ் அதன் மூலம் ஒன்றைத் தேடும். அதனை இயக்கும். இல்லையேல் இயங்கும் முன் நின்று அதற்கான பிழைச் செய்தியினைத் தரும்.

Linux: (லினக்ஸ்)இது ஒரு கம்ப்யூட்டர் ஆப்பரேட்டிங் சிஸ்டம். பெர்சனல் கம்ப்யூட்டர் உட்பட அனைத்து வகை கம்ப்யூட்டர்களிலும் இது இயங்கும். இதனை யாரும் தங்கள் விருப்பத்திற்கேற்ப மாற்றி அமைக்கலாம். அதற்கான சோர்ஸ் கோட் இலவசமாக இணையத்தில் கிடைக்கிறது.

Reboot: (ரீபூட்)கம்ப்யூட்டரை மீண்டும் ஒரு முறை புதிதாக இயக்குதல். பொதுவாக இவ்வாறு மீண்டும் இயக்குவதை ஸ்டார்ட் மெனுவில் கிடைக்கும் ரீஸ்டார்ட் மூலம் இயக்குவார்கள். பெர்சனல் கம்ப்யூட்டரின் டவரில் ரீஸ்டார்ட் பட்டன் தரப்பட்டிருந்தாலும் அதனை அழுத்தியும் ரீஸ்டார்ட் செய்திடலாம் கண்ட்ரோல் + ஆல்ட்+ டெலீட் கீகளை அழுத்தியும் இந்த ரீஸ்டார்ட் செயல்பாட்டினை மேற்கொள்ளலாம்.

Registry :(ரெஜிஸ்ட்ரி)விண்டோஸ் இயக்கத்துடன் இணைந்து அமைக்கப்பட்டுள்ள ஒரு பைல். கம்ப்யூட்டரில் உள்ள அனைத்து ஹார்ட்வேர் மற்றும் சாப்ட்வேர் குறித்த

தகவல்களை உள்ளடக்கிய பைல். இதில் நாமாக மாற்றங்கள் ஏற்படுத்தும் முன் இதன் பேக் அப் காப்பி ஒன்றை எடுத்துக் கொள்வது நல்லது. புரோகிராம்களின் அடிப்படைச் செயல்பாட்டில் மாற்றங்களை மேற்கொள்ள இந்த பைலில் உள்ள வரிகளில் தான் மாற்றங்களை மேற்கொள்ள வேண்டும்.

Wizard:(விஸார்ட்) இது ஒரு தானாக இயங்கும் சிறிய விண்டோ. ஆன்லைன் அசிஸ்டன்ட் என்றும் சொல்லலாம். அதிக நெளிவு சுளிவுகள் நிறைந்த கம்ப்யூட்டர் அமைப்பில் உங்களை தெளிவுடன் வழி நடத்தும் ஒரு புரோகிராம்.

கேள்வி பதில்

கேள்வி: எக்ஸெல் ஒர்க் புக்கில் இந்திய முறைப்படி ஏன் எண்கள் கமா போட்டு வருவதில்லை. எடுத்துக் காட்டாக 12,345,678 எனக் கிடைக்கிறது. இதனை 1,23,45,678 எனக் கிடைக்க என்ன செய்திட வேண்டும்? எங்கு மாற்ற வேண்டும்?

– ஆர். சகாதேவன், சென்னை

பதில்: நம்முடைய பழக்கத்திற்கு எக்ஸெல் தொகுப்பை மாற்றவேண்டும் என்பது உங்கள் அவா. இல்லையா? எக்ஸெல் தொகுப்பில் பணியாற்றும் பலருக்கு வரும் சந்தேகம் இது.



நீங்கள் முதலில் குறிப்பிட்டிருப்பது அமெரிக்க முறை. கேட்பது இந்திய முறை. இந்த முறை வேண்டுமென்றால் எக்ஸெல் தொகுப்பின் Custom பார்மட்டைப் பயன்படுத்த வேண்டும். முதலில் காற்புள்ளிகள் எதுவும் இல்லாமல் வெறும் எண்ணை டைப் செய்திடுங்கள்.

எடுத்துக் காட்டாக 123456789 என்று டைப் செய்யவும். பின்பு அந்த செல்லைக் கிளிக் செய்த பின்னர் Format --> Cells கட்டளையைக் கொடுங்கள். Number டேபை அழுத்துங்கள். Categories என்பதில் Custom என்பதைத் தேர்வு செய்திடுங்கள். Type என்பதில் எண்ணின் மதிப்பிற்கேற்ப கீழேயுள்ளபடி டைப் செய்து ஓகே செய்யுங்கள். மதிப்பு 1000 முதல் 99999 வரை ##\,### எனவும்

100000 முதல் 9999999 வரை ##\,##\,### எனவும்

10000000 முதல் 999999999 வரை ##\,##\,##\,### எனவும் டைப் செய்யுங்கள்.

கேள்வி: டாஸ்க் பாரை மறைத்து பின் கர்சரைக் கொண்டு செல்லும் போது மட்டும் எப்படிப் பயன்படுத் துவது?

– ஏ. தம்பிராஜ், கம்பம்

பதில்: இதற்கு ஒரு சிறிய செட் அப் மேற்கொள்ள வேண்டும். டாஸ்க் பாரில் வெற்றிடமாக உள்ள இடத்தில் ரைட் கிளிக் செய்திடவும். அதில் விரியும் மெனுவில் "Properties" என்ற பிரிவில் கிளிக் செய்திடவும். பின் கிடைக்கும் மெனுவில் "Autohide" அல்லது "Autohide taskbar" என்ற கட்டத்திற்கு எதிராக டிக் மார்க் செய்திடவும்.

இப்போது டாஸ்க் பார் உள்ள இடத்தில் மவுஸைக் கொண்டு செல்லும் வேளைகளில் மட்டும் டாஸ்க் பார் மேலே காட்டப்படும். மற்ற நேரங்களில் திரையில் டாஸ்க் பார் தோன்றாது.

மீண்டும் பழைய படி எப்போதும் டாஸ்க் பார் வேண்டுமென்றால் மேலே சொன்ன இடத்திற்குச் சென்று அந்த டிக் அடையாளத்தை எடுத்துவிட்டால் போதும்.

மொபைல் போனில் வைரஸா!

மொபைல் போனில் வைரஸ்கள் பரவத் தொடங்கி உள்ளன. நோக்கியா போன்களில் சிம்பியன் 60 இயக்கத் தொகுப்பு உள்ள சிரீஸ் வகை சாதனங்களில் இது ஏற்படத் தொடங்கி உள்ளது. இது 'Curse of Silence," எனத் தன்னைத் தானே அழைத்துக் கொள்கிறது. இது பெரும்பாலும் இந்த சிரீஸில் 2.6, 2.8, 3.0 அல்லது 3.1 ஆகிய பதிப்புகள் இயங்கும் மொபைல் போன்களையே பாதிக்கிறது. இது பாதித்த பின்னர் எஸ்.எம்.எஸ்., செய்திகளை பெறுவதும் அனுப்புவதும் தடை படுகிறது. அதே போல எம்.எம்.எஸ். செய்திகளுக்கும் தடை ஏற்படுகிறது. இதுவரை கிடைத்த செய்திகளின் படி இந்த வைரஸ் கீழே குறித்தபடி செயல்படுகிறது. குறைந்தது 32 கேரக்டர்கள் கொண்ட எஸ்.எம்.எஸ். செய்தி கிடைக்கப்பெறுகிறது. இதன் முடிவில் ஒரு ஸ்பேஸ் கொடுக்கப்பட்டு ஒரு இமெயில் முகவரி இருக்கும். இது போல எஸ்.எம்.எஸ். கிடைக்கப் பெற்று போன் லாக் ஆவதிலிருந்து தப்பிக்க அடிக்கடி உங்கள் போன் டேட்டாவினை சிங்க் செய்திட வேண்டும். உங்கள் டேட்டாவினையும் பேக் அப் செய்திட வேண்டும். இதனை எப்படி மேற்கொள்வது என்று தெரியாதவர்கள் கீ பேட் மூலம் *#7370# என டைப் செய்திடவும். அல்லது இன்னொரு வழியும் உள்ளது. பச்சை நிறத்தில் உள்ள கால் கீயையும் ஸ்டார் கீயையும் மற்றும் 3 எண் கீயையும் ஒரு சேர அழுத்தவும். மொபைல் போன் மீண்டும் ரீஸ்டார்ட் ஆகும் வரை அழுத்தவும்.

இது குறித்து குறிப்பாக சோதனை நடத்தியதில் இது போல மெசேஜ் 11 முறை கிடைத்தவுடன் 2.8 மற்றும் 3.1 பதிப்புகளில் இயங்கும் போன் கள் லாக் ஆகிவிடுகின்றன. குறைந்த அளவே கால்களைப் பெறும் வசதி கொண்டதாக மாறுகின்றன. 2.6 மற்றும் 3.0 பதிப்பு கொண்டுள்ள மொபைல் போன்கள் அடுத்ததாக ஒரு செய்தியை அனுப்பியவுடன் லாக் ஆகின்றன. இதனை எப்-செக்யூர் நிறுவனம் சோதனை செய்து பார்த்து உறுதி செய்துள்ளது.

இந்த வார டவுண்லோட்

கம்ப்யூட்டருக்கான ரிமோட் கண்ட்ரோல்

உங்களுக்கு ஒரிரு இடங்களில் கிளைகள் உள்ள வர்த்தகம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. நீங்கள் கம்ப்யூட்டர் வழியாகவே அனைத்து வர்த்தக நடவடிக்கைககளையும் மேற்கொண்டிருக்கிறீர்கள். இதற்கு ஒவ்வொருமுறையும் நீங்கள் இமெயில் பயன்படுத்தி பைல்களை அனுப்பி அல்லது அனுப்பச் சொல்லி வழிகளைக் காட்ட வேண்டியதில்லை.

இன்டர்நெட் இணைப்பில் உங்கள் கட்டுப் பாட்டில் உள்ள கிளைகளின் கம்ப்யூட்டருக்குள் நுழைந்து அதில் உள்ள பைல்களைக் காப்பி செய்திடலாம். மாற்றங்களை ஏற்படுத்தலாம். இதற்கான இலவச சாப்ட்வேர் தொகுப்பு தான் டீம் வியூவர் (TeamViewer).

இது ஒரு ரிமோட் கண்ட்ரோல் புரோகிராம். இதனைப் போல பல புரோகிராம்கள் இருந்தாலும் எளிய வகையில் சிக்கலின்றி நாம் கம்ப்யூட்டர்களை இன்னொரு இடத்திலிருந்து கட்டுப்படுத்த இதுவே சிறப்பாக உதவுகிறது.

நொடியில் மற்ற பெர்சனல் கம்ப்யூட்டர்களுடன் உங்களை இணைக்கிறது. இதற்குத் தனியாக தொழில் நுட்ப உதவி, அல்லது கான்பிகரேஷன் தேவையில்லை. இதற்கென ஐ.பி. அட்ரஸ் உருவாக்க வேண்டியதில்லை.

நீங்கள் யாருடன் கனெக்ட் ஆக விரும்புகிறீர் களோ அவர்களுடன் இந்த இணைப்பிற்கான உங்கள் ஐ.டி. மற்றும் பாஸ்வேர்டினைப் பகிர்ந்து கொண்டால் போதும்.

அண்மையில் தான் டீம் வியூவர் பதிப்பு 4க்கு மேம்படுத்தப்பட்டது. இந்த புதிய பதிப்பின் மூலம் 10 பேர் ஒரே நேரத்தில் நெட்வொர்க்கில் இணைந்து ஒருவர் மற்றவரின் கம்ப்யூட்டரைக் கட்டுப்படுத்தும் வசதி தரப்பட்டுள்ளது.

இதில் என்கிரிப்ஷன் வசதியும் பைல் மாற்றும் வசதியும் ஒருவருக்கொருவர் சேட் செய்திடும் வசதியும் தரப்பட்டுள்ளது.

வர்த்தக நோக்கின்றி பயன்படுத்த இலவசமாகவும் வர்த்தக காரணங்களுக்காகப் பயன்படுத்த கட்டணம் செலுத்திப் பெறும் தொகுப்பும் கிடைக்கிறது.

இந்த புரோகிராம் பெற http://www.teamviewer.com/download/tv4.aspx என்ற முகவரிக்குச் செல்லவும்.

பாடுங்கள் – தேடுங்கள்

இதுவரை நீங்கள் எதனை எல்லாம் இணையத்தில் தேடி இருக்கிறீர்கள். ஒரு மொபைல் போன் குறித்து, மருந்து குறித்து, கம்ப் யூட்டர் பிரச்சினைக் குத் தீர்வு குறித்து என எத்தனையோ வகைத் தேடுதல்கள் நாள் தோறும் பல் வேறு சர்ச் இஞ்சின்கள் மூலமாகத் தேடப்பட்டும் தகவல்கள் பெறப்பட்டும் வருகின் றன.

ஒரு பாடல் உங்க ளுக்குத் தெரியும். அதனைப் பாடவும் உங்களால் முடியும். உங்களுக்கு ஓர் ஆசை. இதே போன்ற பாடல் வேறு எங்கெல்லாம் உள்ளது.

இசைக்குத் தான் மொழி கிடையாதே; அதனால் அந்த பாடல் வேறு மொழிகளில் உள் ளதா என்று அறிய உங்களுக்கு ஆசை. உங்கள் ஆசையினை நிறைவேற்றும் வகையில் பாடுங்கள் – தேடுங்கள் என ஓர் இணைய தளம் உள்ளது. இதன் முகவரி “www.miomi.com” என்பதாகும்.

பாடல்களைத் தேடுவது மிகவும் எளிதானது. அதற்கு நீங்கள் செய்ய வேண்டிய தெல்லாம் பாட வேண்டியது தான். உங்கள் கம்ப்யூட்டரில் மைக் பொருத்தப்பட்டு இயங்கு கிறதா? இந்த தளத்தில் சென்று தேடல் இஞ்சினை இயக்குங்கள். கிளிக் செய்து பாடுங்கள் என்று ஒரு வேண்டு கோள் கிடைக்கும். உடனே பாடுங்கள்.

ஓரிரு நிமிடங்கள் பாடினால் போதும். பின் இந்த தளம் தான் பதிவு செய்ததைக் கொண்டு அனைத்து தளங்களிலும் இதே போல் பதிவு செய்த பாடல் களைத் தேடி அதே போல் ராகம் உள்ள பிற மொழிப் பாடல் களைப் பட்டியலிடுகிறது.

தமிழிலும் பாடலாம். பின் பட்டியலில் கண்டுள்ள பாடல் களை இயக்கிக் கேட்கலாம். அவை நீங்கள் பாடிய பாடலை ஒத்துள்ளதா எனப் பார்க்கலாம். இந்த தளத்தில் நீங்கள் ஓர் உறுப்பினராகப் பதிவு செய்து கொண்டு உங்களுக்குப் பிடித்த விஷயங்கள் குறித்து சுருக்கமாக எழுதிப் பதிந்தால் ஒத்த நண்பர்கள் வட்டம் உங்களுக்கென உருவாகும்.

இசை வழி உயர்ந்த நட்பு தரும் இந்த தளத்தைச் சென்று பார்த்துவிடுங்கள். பாடத் தெரிந்தால் பதிந்தும் விடுங் கள்.

தினமலர் நாளிதழின் இணைப்பாக ஒவ்வொரு திங்கட்கிழமையும் வெளிவருவது கம்ப்யூட்டர் மலர், படைப்புகளை சுருக்கவும், திருத்தவும் பொறுப்பாசிரியருக்கு முழு உரிமை உண்டு. படைப்புகளை அனுப்பும்போது அந்தந்த பகுதியின் தலைப்பை முகவரியில் எழுதவும். முகவரி: த.பெ.எண்: 517, சென்னை–600 008. தொலைபேசி: 044–2819 5000

ஒரே கிளிக்கில்
உங்கள் நகரத்தில் உள்ள
கம்ப்யூட்டர் நிறுவனங்கள்
வழங்கும் படிப்புகளை
பார்வையிட...



www.kalvimalar.com

கம்ப்யூட்டர் நிறுவனங்களின் முகவரி, தொலைபேசி,
வெப்சைட் முகவரி மற்றும் நிறுவனம் வழங்கும்
வேலைவாய்ப்புள்ள புதிய படிப்புகளின்
பட்டியலை பெற்று உங்களுக்கு ஏற்ற படிப்பை
தேர்வு செய்யலாம்.

கல்வித் தகவல்கள்
அனைத்தும் ஒரே இடத்தில்

கல்விமலர்
தமிழில் முதல் கல்வி வெப்சைட்
www.kalvimalar.com